பாலவித்யா

தொகுதி 1 பகுதி 3.

மார்ச் 1930.

JL

ண211,1 N30BV

N30·1·3.

188769

185

Regd. No. M. 2573.

பாலவித்யா சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய இடங்களுக்கு வருஷம் ஒன்றுக்கு தபாற்கூலியுள்பட ரூபா. 1—8—0

சிங்கப்பூர், பினங், தென்னாப்பிரிக்கா, ஜாவா முதலிய வெளி நாடுகளுக்கு முன்பணம் ரூபா 2—0—0.

ஜீவிய சந்தா உள்நாட்டிற்கு ரூ 15 வெளி நாட்டிற்கு ரூ 20.

ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா இல்லை

"பாலவித்யா" தனி சஞ்சிகை அணா மூன்று

சந்தாதாரர்களுக்கு முக்கிய அறிவிப்பு.

(1) சந்தாதாரர்கள் எந்தமாதத்தில் சந்தாதாராய்ச் சேர்ந்தாலும் ஜனவரி மாதத்திலிருந்தே கணக்கு வைக்கப்பட்டு முன் மாதத்திய சஞ்சிகைகளையெல்லாம் அனுப்புவிக்கப்படும்.

(2) நமது பத்திரிகை பிரதி இங்கிலீஷ்மீ கடைசி தேதியில் வெளிவரும். பத்திரிகை வெளியான பத்து தினங்களுக்குள், அது உங்களுக்கு வந்து சேராவிட்டால், உடனே எங்களுக்கு எழுதினால் நாங்கள் கவனிப்போம். அதற்கு மேற்பட்டால் சஞ்சிகையின் கிரயத்திற்காக மூன்று அணா தபால்பில்லை வாங்கி அனுப்பினால்தான் மறுபடியும் ஸஞ்சிகை அனுப்பப்படும்.

(3) சந்தாதாரர்கள் நமது சந்தாத் தொகையை முன்னதாக மணியார்டர் பண்ணிவிட்டால் இரு பாலர்க்கும் ஸௌகர்யம். வி. பி. யில் அனுப்புவதாயிருந்தால் சந்தாதாரர்களுக்கு நான்குஅணா அதிகமாக செலவாகிறது. சிங்கப்பூர், பினங்கு முதலிய வெளிநாடுகளுக்கு வி. பி.யில் அனுப்பமுடியாது. அவர்கள் முன்பணம் மணியார்டர் செய்தாவது பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர்கள் வாங்கியனுப்பித்தாவது சந்தாதாரராகச் சேரவேண்டும்.

(4) சந்தாதாரர்கள் நமக்கு கடிதம் எழுதும்போது எப்பொழுதும் சந்தாநம்பரை எழுதவேண்டும். பதில் வேண்டுவோர் ரிப்ளை கார்டாவது தபால் பில்லையாவது வைத்து அனுப்பவேண்டும்.

(5) முக்கிய குறிப்பு:—நமது ஸஞ்சிகைக்கு சிறந்த கட்டுரைகளும் அரியவியாஸங்களும் மற்றும் உள்ள அரிய நீதி ஸாரங்களும் பிரசுரிப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்படும். அப்படி அனுப்பப்படுபவைகளை ஸஞ்சிகை பிரசுரிக்கும் தேதிக்கு போதுமானகாலம் முந்தியே அனுப்பவேண்டும்.

விளம்பர விகிதம்.

ஒரு மாதத்திற்கு, முழுப் பக்கம் ரூ 20 • அரைப் பக்கம் ரூ 11.
மற்றபடி நீண்டகால விளம்பரத்திற்கு எங்கள் ஆபீஸுக்கு எழுதவும்.

பாலவித்யா ஆபீஸ்,
நெ. 5, கீழ அய்யன் தெரு, ஸ்ரீவித்யா பிரஸ், கும்பகோணம்.

உ

பால வித்யா.

(மாதப் பத்திரிகை.)

5- APR 1930

" உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்"
" எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

தொகுதி I	1930ஸு மார்ச்சுமீ சுக்லஸு பங்குனிமீ	பகுதி III

பொருளடக்கம்.

	பக்கம்.
விருந்து	ii—iv
சபேசன் (தொடர்ச்சி)	81—96
கற்புள்ள இந்திரா	1—32

விருந்து.

தமிழாசிரியர் ஸ்ரீமான் T. A. ஸ்ரீனிவாஸாசாரியார் எழுதியது.

நாம் பண்டிகை நாட்களில் 'எங்கள் வீட்டில் இன்று விருந்து' என்று சொல்லிக்கொள்வதுண்டல்லவா? தவிரவும், அன்று நம் வீட்டிற்கு வந்த உறவினரை 'விருந்தாளி' என்றுங் கூறுகிறோம். உண்மையாய்ப் பார்க்குமிடத்து உறவினரை விருந்தாளி என்றழைப்பது தவறு என்று ஏற்படுகிறது. விருந்து என்னும் பதம் புதுமை என்னும் பொருளுடைத்தாம். எனவே, புதுவதாக நம்மில்லம் வந்து அருந்திப் போவாரே உண்மையில் விருந்ினராவர்.

அறுசுவையோடுங் கூடிய நால்வகை உண்டிதான் 'விருந்துணவு' என்பதில்லை. பசியால் எங்கேனும் சிறிது உணவு கிடைக்காதா? எவரேனும் கொஞ்சம் கொடாரா என நலிந்து வருபவரைப்பற்றிக் கேட்டவளவிற் சென்று, கண்டவளவில் முகமலர்ந்து அழைத்துவந்து, இன்சொற்கூறி, அகமலர்ச்சியோடும் உப்பில்லா அற்பக்கூழிடினும் அதுவே சீரிய விருந்தமுதாம். அவ்விருந்தே பசித்தழலவிக்கும் நல்மருந்தாம். இங்ஙனம் ஒருநாளிருநாள் செய்வது மாத்திரமல்ல, அன்றாடம் வந்த விருந்தோம்பி. வருவிருந்து பார்த்துண்பித்து, எஞ்சிய வற்றைப் புசித்தலே நம் கடமையாம். இக் கடமையில் மற்றையோரினும் வேளாளர் சிறந்தோர் என்பர்.

இப்படி நாடோறும் செய்துவந்தால் குபேரனும் விரைவில் ஏழையாகிவிடுவானே என ஐயுறலாம். காட்டிலும் ஒரு நீர்நிறைந்த தடாகம் இருக்கிறது. நாட்டிலும் அஃதேபோல் ஒன்றுளது. காட்டுக்குளம் ஒருவருக்கும் பயன்படுவதில்லை. நாட்டதோ யாவர்க்கும் உபயோகமாகிறது கோடைக்காலத்தில் இரண்டும் வற்றிவிடுகின்றன. எக்குளம் மிகப் புகழ் மிக்கது என்று கவனிப்போமாக. இனி விருந்ினர்ப் பேணுதலால் விளையும் பலனை விளக்க, சுந்தரமூர்த்திசுவாமிகளால் 'இளையான்றன் குடிமாற னடியார்க்கு மடியேன்' என்று திருத்தொண்டத் தொகையில் சிறப்பிக்கப் பட்டுள்ளவரது சரித்திரத்தைக் கவனிப்போம்.

5 APR 1930 MADRAS

தமிழ் மணம் கமழும் பாண்டி நாட்டில் இளையான்குடியென்ற ஓர் ஊர் உண்டு அது, நீர் வளம், நில வளம், குடி வளம், மிக்க தொல்பதி. அவ்வூரில் மாறனார் என்ற ஒருவர் இருந்தனர். அவர் உழுதுண்டு வாழும் தொழிலை மேற்கொண்டவர். விருந்ினரை உபசரிப்பதில் மிகச் சிறந்தவர். தாம் வேளாண்மை செய்வதெல்லாம் விருந்தினர்க்காகவே என்ற எண்ணமுடையவர். பயிர் செய்து பசிபோக்கும் தொழிலை செய்தற்கே இவ்வுடல் தமக்குக் கடவுளால் அளிக்கப்பட்டது என்ற கருத்துடையவர். மரம் பழுத்தால் வௌவாலை அழைக்கவும் வேண்டுமோ? வேண்டாம். தினந்தினம் எண்ணில்லாத ஏழைகளும், அடியார்களும் அவரில்லம் சென்றனர். வந்தவர்க்கெல்லாம் நல்வரவு கூறி உவப்புடன் அமுதளித்து வந்தனர் அப்பெரியார். வயிறார உண்டவர்களும் அவருக்கு வாழ்த்துக்கூறி மகிழ்ந்தகன்றனர். இதனால் மாறனார் செல்வம் வளர்ந்து அளகேசன் என்னலாம்படி இருந்தார்.

செல்வமிருந்தால் செய்வதற்கென்ன? எளிது தானே. வறுமை வந்தாலன்றோ தெரியுமென்று நாம் எண்ணிவிடக்கூடும். அவர் வறியராயினும் விடார் என்பதை உணர்த்த இறைவனருளால் சின்னாட்களில தரித்திரமும் எய்தினர். சங்கு சுட்டாலும் என்ன தரும்? பெரியோர் கெட்டாலும் மனஞ் சிறியராவரோ? ஒருகாலுமாகார். அவ்வடியவரும் தமது உறைவிடமும் சிறிது நிலமுந் தவிர மற்ற அசையும் அசையாப் பொருளெல்லாவற்றையும் விற்று அத்திருப்பணியை முன்னினும் அதிகமாகவே நடத்திவந்தனர். தம்மையே ஈடுபடுத்தினும் ஒவ்வாத அத்துணைக் கடன்பெற்றும் செய்தனர். கடன் கொண்டும் செய்வன செய்தல் இனிதேயன்றோ?

நல்ல மாரிக்காலம். சிலதினங்களாக அல்லும் பகலுமாக விடா மழை பொழிகிறது. இரவின் இருளோ சொல்லத்தரமன்று. மாறனாரும் அவர் வீட்டாரும் பட்டினிகிடக்கின்றனர். இருந்த விதை நெல்லையும் வயலில் அன்று பகலில் விதைத்துவிட்டனர். வீட்டில் உணவுப் பொருள் சிறிதுமில்லை. காலமோ இரவு நெடுநேரமாயிற்று. அவரும் பசியோடு படுத்திருக்கின்றனர். ஊரிலுள்ளோரெல்லாம் உறங்குகின்றனர். அச்சமயம் ஓர் விருத்தர் மழையால் நனைந்து குளிர் நடுக்கத்தோடு மாறனார் வீட்டுக்கதவை இடித்தனர். மாறனார் விரைவில் கதவைத்திறந்து வந்தவர் நிலைமையைக்கண்டு பெரிதிரங்கி, உள்ளழைத்தேகி, ஈரம் புலர்த்தி, அனல்மூட்டிக் குளிர்போக்கி, படுக்கச் செய்தனர். பின்னர், வந்தவர் அறவும் பசித்திருக்கிறார் என்பதறிந்து ஒன்றும் செய்யத்தோன்றாராய்த் தம் மனைவியிடம் தெரிவித்தனர்.

அவர் தம் மனைவியாரும் கணவரைப்போலவே தளர்வெய்தி பின்னந்தெளிந்து, 'இன்னுயிர் துணைவ! அடியாள் என்செய்வது? அயலார்கள் இது சமயம் உதவார்கள். ஆதலினால் தாங்கள் பகலில் விதைத்த நெல்லை வாரிவந்தால் யான் செவ்வனே பாகஞ்செய்து தருவேன்' என்றனர். உடனே அப்பெரியவரும் மகிழ்வெய்தி மழையிலும் இருளிலும் வழி தடவிச்சென்று ஓர் இறை கூடையில் தம் நிலத்து ஒரு மூலையில் ஒதுங்கிய நெல்லைக் கொணர்ந்தனர் எதிர் பார்த்திருந்த மனைவியாரும் வாயிலிலேயே பெற்றுவந்து, விறகுக்காகக் கணவனார், வீட்டின் அலக்கினை வீழ்த்தித்தர, தாம் கனலெழுப்பிப் பக்குவப்படுத்திக் குற்றிச் சமைத்தனர். பின்னர் கறியமுதுக்குக் கென் செய்வதென்றனர். உடனே மாறனார் தோட்டத்துக் குழி களிலிருந்த சிறு பயிரைப் பிடுங்கி வந்தீந்தனர். அதனைப் பல்வேறு வகையாகப் பாகஞ்செய்தனர் அவர் மனைவியார்.

பிறகு கருத்தொன்றிய கணவனும், காதலியுமாகத் துயில்கொள் பெரியோரை அமுதுசெய்விக்க எழுப்பினர். வந்தவர் கடவுளே யாதலால் அவர் உடனே சோதியாகி மறைந்து ஆகாயத்திலிருந்து தரிசனம் தந்து அத்தம்பதிகளை நோக்கி "உங்கள் விருந்தோம்பும் திறத்திற்கு நாம் மகிழ்ந்தோம். நீங்கள் முடிவில் என்பால் வரக்கடவீர்", என்றுக் கூறிப் பேர் அருள் செய்தனர். மாறனாரும் அவரது மனைவியாரும்; விருந்தினரைத் தாங்கள் இவ்வுலகில் உபசரித்ததே போல் தேவர்கள் தங்களை உபசரிக்க இறைவன் திருவடியெய்தி யின்புற்றனர். ஒருவன் காப்பாற்றவேண்டிய ஐம்புலத்தாரில் தெய்வத்திற்கடுத்தபடியாக நிற்பவர் விருந்தினர். விருந்தோம்பல் சிறந்தோர் கடமையாம்.

இதுபற்றியே ஔவைப்பிராட்டியார் 'உண்டிக்கழகு விருந்தோடுண்டல்' என்று கூறியிருக்கின்றார். நொய்யளவே யிருப்பினும் பகிர்ந்துண்டலே புகழும் புண்ணியமும் தரும்.

" விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று "

என்றும், அப்படி விருந்தினர்ப் பேணுவோர் நிலம், விதைக்காமலே விளையும் என்றும் பொய்யாமொழிப் புலவரே புகல்கின்றனர்.

(Copyright reserved by the Author).

" காமாக்ஷீ! அவளுக்கு நம் ரஹஸ்யம் தெரிந்தபோதிலும், அதைத் தன் தந்தையிடம் சொல்லத் துணியமாட்டாள்." என்று உறுதியுடன் கூறினான்.

காமாக்ஷி, அடக்கமாட்டாத ஆவலுடன், "ஏன்?" என்று வினவ, சீச்சு,

" அதன் காரணத்தை நீ அறிந்துகொள்ளவேண்டிய அவசியமில்லை." என்று கண்டிப்பாய் விடையளித்தான்.

காமாக்ஷி:—" சிச்சு! நீ பேசுவதிலிருந்து அவளும் உன்னிடம் மாட்டிக்கொண்டிருக்கிறாளென்று தோன்றுகிறது. ஆனால், உன் தந்திரம் அவளிடம் பலிக்காது. அவள் சீக்கிரம் உன் வலையிலிருந்து வெளிப்பட்டு விடுவாள். தவிர, அவளைப் பாலகிருஷ்ணன் காதலிக்கிறானென்பது உனக்கே தெரியும். அவன் இலேசானவனல்லன். ஆகவே, அவ்விருவர்களும் ஒன்று சேரும் பக்ஷத்தில் நீ கண்டிப்பாய் அபஜயமடைவாய்."

சீச்சு:—(சிரித்துக்கொண்டே) "வாஸ்தவமே; அவர்களிருவரும் ஒன்று சேரும் பக்ஷத்தில் நான் அபஜயமடைவேன். ஆனால் அவர்களைப் பிரித்துவிட்டாலோ?"

காமாக்ஷி:—(வியப்புற்று) " நீ சொல்வது விளங்கவில்லையே?"

சீச்சு:—" அப்படியா? பாலகிருஷ்ணன் அவளை மணப்பது முடியாத கார்யம்."

காமாக்ஷி:—" ஏன்? ஏன்?"

சீச்சு:—" முதற்காரணம், தற்சமயம் எனக்கு, அவளைப் பற்றித் தெரிந்த விஷயத்தைப் பாலகிருஷ்ணன் அறியும்பக்ஷத்தில், அவளை மனைவியாகக் கொள்ள ஒருநாளும் ஸம்மதிக்கமாட்டான். இரண்டாவது காரணம், அவளை நானே விவாஹம் செய்துகொள்ளத் தீர்மானித்திருக்கிறேன்."

இதைக்கேட்டதும், காமாக்ஷி தன் இரு செவிகளையே நம்ப இஷ்டப்படாதவள்போல் காணப்பட்டாள். வர வர

அவளுடைய முகம், வெறுப்பினாலும், கோபத்தினாலும் மாறியது. கடைசியில் பரிஹாஸக்குரலில்,

"உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதென்று நினைக்கிறேன். நீ ஒருநாளும் அவளை விவாஹம் செய்துகொள்ள முடியாது." என்றாள். சீச்சு மேலும் நகைக்க ஆரம்பித்து,

"காமாக்ஷி! நீ என்னுடன் இவ்வளவுதூரம் பழகியும் நான் எப்பேர்ப்பட்டவனென்பதை நன்றாயறிந்துகொள்ளவில்லை. அடியே! கூடியசீக்கிரம், நான் அவளை விவாஹம் செய்துகொள்ள முடியுமா முடியாதா என்பதைக் கண்டுகொள்ளுவாய். சரி, நாழியாய்விட்டது; வந்தகார்யத்தைப் பார்ப்போம். காமாக்ஷி! எனக்கு இப்பொழுது 50 ரூபாய் பணம் வேண்டும்." என்றான்.

காமாக்ஷி, தன் வெறுப்பையும், கோபத்தையும் அடக்க மாட்டாமல், "என்னிடம் பணம் இல்லை!" என்று சீறி விழுந்தாள்.

சீச்சு, "காமாக்ஷி! நீ கோபிப்பதில் எள்ளளவும் பிரயோஜனமில்லையென்பது உனக்கே தெரியும். ஆகையால், வீண் வம்புசெய்யாமல், உடனே சென்று, நான் கேட்குப் பணத்தை எடுத்துக்கொண்டுவா." என்று அதிகாரத் தொனியில் கூறினான். காமாக்ஷி,

"நீ அப்படத்தை என்னிடம் கொடுத்தாலொழிய, இனி உனக்கு நான் பணம் கொடுக்கவே மாட்டேன்." என்றாள்.

"அப்படியா? சரி! இன்று மாலை அதைக் கண்டிப்பாய் உன்னிடம் கொடுத்துவிடுகிறேன்."

காமாக்ஷி, அவனுடன் மேலும் தர்க்கம் செய்வதில் லாபமில்லையென்பதை வாஸ்தவத்திலறிந்தவள்போல், அவ்விடத்தை விட்டு, தன்னுடைய பர்த்தாவினறைக்குச் சென்றாள். அங்கு, ஒரு கட்டிலின்மேல் படுத்துக்கொண்டிருந்த கோபாலய்யர், அவளைக்கண்டதும், என்னவேண்டுமென்று கேட்க, காமாக்ஷி சற்றும் தயக்கமின்றி, மளிகைக்

கடைக்காரன் பணத்திற்கு வந்திருப்பதாகவும், உடனே 50 ரூபாய் வேண்டுமென்றும் விடையளிக்கவே, அவர், மேலே பேசாமல், ஒரு சாவியை அவளிடம் கொடுத்தார். காமாக்ஷி, பணப்பெட்டியைத் திறந்ததும், திடுக்கிட்டு, மறுபடியும் தன் நாதரிடம் ஓடி,

"ஏன்னா! பெட்டியில், கமலத்தின் தாயாருடைய நகைப்பெட்டியைக் காணவில்லையே!" என்று கவலையுடன் கேட்க, கோபாலய்யர்,

"அடாடா! உன்னிடம் சொல்ல மறந்துவிட்டேன். பிள்ளையார்கோவில் தெரு ஸுந்தரேச ஐயர் வீட்டில் ஏதோ கல்யாணமாம்; அவர், நான்கு தினங்களுக்கு அவைகளை வாங்கிக்கொண்டு போயிருக்கிறார்." என்று விடையளிக்கவே, காமாக்ஷியின் குழப்பமும், கவலையும் அதிகரித்தன. ஆனால் அதை வெளிக்காட்டிக்கொள்ளாமல்,

"என்னவோவென்று பயந்து விட்டேன்." என்று சொல்லிக்கொண்டே மறுபடியும் பணப்பெட்டியை அணுகி, வேண்டிய பணத்தை எடுத்துக்கொண்டு, வெளியே சென்றாள். சீச்சுவிடம் அப்பணத்தைக் கொடுத்துவிட்டு, பலதரம், அவனை அப்படத்தைக் கொடுத்துவிடும்படி கல்லும் கரையும்விதம் கெஞ்சினாள். ஆனால், சீச்சு அதைச் சற்றும் கவனிக்காமல், பணத்தைச் சட்டைப்பையில் வைத்துக்கொண்டு, வெளியே போய்விட்டான்.

நிற்க, கமலத்தைக் கவனிப்போம். அவள், சீச்சு அவ்வீட்டிற்குள் நுழைந்ததும், பிசாசைக் கண்டவள்போல் ஓடித் தன்னறைக்குள் ஒளிந்துகொண்டாள். பிறகு அவள் அவன் போய்விட்டானென்பதை நிச்சயமாயறிந்துகொண்டதும், வெளியே வந்து, தன் தந்தையிடம் சென்றாள். கோபாலய்யர், பிரியத்துடன் அவளைத் தம் பக்கத்தில் உட்காரவைத்துக்கொண்டு,

"அம்மா கமலம்! நான் உன்னை எவ்வளவோ கெஞ்சிக் கேட்டும் உள்ள விஷயத்தை என்னிடம் சொல்லமாட்டே

றென்கிறாய்! நீ இங்கு வந்தது முதற்கொண்டு, உன்னிடம் பல வித்தியாஸங்கள் காணப்படுகின்றன. நீ இதுவரையில் இங்கு வரும்பொழுதெல்லாம், சதா சிறு குழந்தைபோல் ஓடி விளையாடிக்கொண்டும், அடிக்கடி உன் தோழிகள் வீடுகளுக்குப் போவதுமாயிருப்பவள், இந்த ஒருமாத காலமாய், நீ இன்னும் இவ்வீட்டைவிட்டு வெளியே செல்லவில்லை. எல்லாம்போக, தினந்தோறும், கிட்டு (பாலகிருஷ்ணன்) உன்னைக் காணும்பொருட்டு, மிகவும் ஆவலுடன் வந்ததும், நீ அவனைக் கண்டதும் ஓடி ஒளிந்துகொள்ளுகிறாய். என் செல்வமே! உன்மீது உயிரை வைத்திருக்கும் என்னிடத்தில் நீ விஷயத்தை ஒளிப்பது அழகோ? அம்மா! உடனே நடந்ததைச் சொல்லிவிடு" என்று கமலத்தின் கரங்களைப் பிடித்துக்கொண்டு மன்றாடினார். ஆனால் கமலம் அதற்குள் தன் குழப்பத்தை மறைத்துக் கொண்டுவிட்டாள். அவள்,

"அப்பா! நீங்கள் அனாவசியமாய் இப்படிக் கவலைப்படுவது சரியல்ல." என்றாள்.

கோபாலய்யர், தாம் மேலும் அதைப்பற்றிப் பேசுவதில் பிரயோஜனமில்லை என்று நினைத்தவர்போல் விட்டுவிட்டார். பிறகு, அரைமணி நேரத்திற்கெல்லாம், காமாக்ஷி கையில் காபியுடன் உள்ளே வர, அதை வாங்கிக் குடித்துவிட்டு, வெளியே போய்விட்டார், உடனே, காமாக்ஷியும் போய்விடவே, கமலம் பக்கத்திலிருந்த ஒரு வர்த்தமானப் பத்திரிகையை எடுத்து வாசிக்க ஆரம்பித்தாள். ஆனால், மறுநிமிஷம், பாலகிருஷ்ணன் உள்ளே நுழைய, திடுக்கிட்டவளாய், அவ்வறையைவிட்டு ஓடயத்தனித்தாள். அதைக் கண்ட பாலகிருஷ்ணன் அவளப்படிச் செய்யமுடியாமல், ஒரே தாவலாய்த் தாவி, அவளுடைய கரங்களைப் பற்றிக்கொண்டு,

"கமலம்! இன்று உன்னை விடமாட்டேன். அன்பே! சென்ற ஒருமாதகாலமாய், உன் நடவடிக்கைகளைக் காண, எனக்கு ஒன்றும் தெரியவில்லை! ஹா! என் கண்மணி! உன்னை விட்டுப் பிரிந்திருக்கும் ஒவ்வொரு நிமிஷமும் நான் படும்பாடு தெய்வத்துக்குத்தான் தெரியும். அப்படியிருக்க நீ இவ்விதம் என்னை அலக்ஷியம் செய்வது அழகல்ல!" என்று ஆத்திரத்துடன் கூறவே, கமலம், விடையளிக்காமல் கொஞ்சநேரம், தரையை உற்று நோக்கியவண்ணம் நின்றாள். பிறகு, தாழ்ந்த குரலில்,

"அத்தான்! நானிங்கு வந்தது முதற்கொண்டு, உங்களிடம் சரிவரப் பேசவில்லையென்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால், அதற்குக் காரணம், நான் உங்களை அலக்ஷியம் செய்வதல்ல. இப்படி நீங்கள் தவறான அபிப்பிராயங் கொண்டதைக் காண மிகவும் வருத்தமாயிருக்கிறது." என்றாள்.

"பின் வேறு என்ன காரணம் இருக்கமுடியும்? கமலம்! நீ இதுவரையில் இங்கு வரும்பொழுதெல்லாம், நான் ஒருநாள் உன்னை வந்து பார்க்காவிட்டால், என்னை உடனே அழைத்துவரும்படி, உன் வீட்டு வேலைக்காரர்களில் பலபேர்களை அனுப்புவாயே! அப்படியிருக்க, நான் தற்சமயம், தினந்தவறாமல் இங்கு வந்தபோதிலும், நீ என்னைக் கண்டதும், ஏதோ ராக்ஷஸனைக் கண்டவள்போல் ஓடி ஒளிந்துகொள்வதைக் காண நான் சந்தேகிக்காமலிருக்க முடியுமோ?"

மறுபடியும் கமலம் சிந்தனையிலாழ்ந்தவள்போல் காணப்பட்டாள். அவளுடைய கண்களிலிருந்து, நீர் தாரை தாரையாய் வெளிக்கிளம்பி வெளுத்த அவளுடைய கன்னங்களில் வழிந்துகொண்டிருந்தது. நடுவில் பலதரம் பெருமூச்செறிந்தாள். கடைசியில் தன் தலையைத்தூக்கி, பாலகிருஷ்ணனை உற்று நோக்கியவாறு,

"அத்தான்! நீங்கள் இப்படிப் பேசுவதற்குக் காரணமென்னவென்பதை யறிந்துகொண்டேன். நான் வேறு யாரையாவது காதலிக்கிறேனோவென்று நீங்கள் சந்தேகிக்கிறீர்கள். அப்படியிருக்கும்பக்ஷத்தில் அக்கவலையை உடனே விட்டுவிடுங்கள். வேறு புருஷனை என் மனதில்

நினைக்கவும் மாட்டேனென்பதைக் கண்டிப்பாயறிந்து கொள்ளுங்கள்." என்று உறுதியுடன் கூறவே, பாலகிருஷ்ணன், "அப்பாடா!" என்று ஒருதரம் பெருமூச்செறிந்தான். அவனுக்கு, அதுவரையில், தன் ஹிருதயத்தைத் தூக்கிக்கொண்டிருந்த ஒரு பெரும் பாரம் நீக்கப்பட்டது போலிருந்தது. சந்தோஷத்தில் தன்னைத்தானே மறந்து, கமலத்தை யப்படியே வாரியணைத்துக்கொண்டான். பிறகு, மெல்ல அவளை யழைத்துச்சென்று, ஒரு ஆசனத்திலுட்கார வைத்து, தானும் பக்கத்திலமர்ந்துகொண்டான். கொஞ்ச நேரம், இருவரும் மௌனமாயிருந்தார்கள். அதன்முடிவில் பாலகிருஷ்ணன்,

"கமலம்! இதுவரையில் என்னை வதைத்துக்கொண்டிருந்த ஒரு பெரும் சந்தேகம் தீர்ந்துவிட்டது வாஸ்தவமே. ஆனால், எனக்கு உன்னைப்பற்றிய கவலை இன்னும் தீரவில்லை." என்றான். கமலம், ஆச்சர்யப்பட்டவள்போல் பாசாங்கு செய்து,

"ஏன்? எதற்காக நீங்கள் கவலைப்படவேண்டும்?" என்று வினவ, பாலகிருஷ்ணன்,

"உள்ளதைச் சொல்லிவிடுகிறேன்! உனக்குச் சாதாரணமாய், காமாக்ஷியின் அத்தை பிள்ளையாகிய சீச்சுவின் மீதுள்ள வெறுப்பை நான் நன்கறிந்தவனாகையால், நீ அன்று அவனுடன் சென்னையிலிருந்து வந்ததைக்காண, என் மனதில் சற்றும் சமாதானமே இல்லாமலிருந்தது! ஆனால், ஒருகால், நீ அவனைக் காதலிக்கிறாயோவென, நான் பயந்தேனென்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். எனவே, இப்பொழுது நீ சொன்னதிலிருந்து, காரணம் அதல்லவென்று கண்டுகொண்டேன். அப்படியிருக்கும் பக்ஷத்தில் அதற்குக் காரணம் வேறு என்ன இருக்கக் கூடும்! இன்னும் நீ இங்கு வந்ததுமுதற்கொண்டு, ஏதோ கிலி பிடித்தவள்போல் காணப்படுகிறாய். எல்லாவற்றையும் யோசிக்கும்பொழுது, நீ அவனுடைய சூழ்ச்சியில்சிக்குண்டு,

அதன்பலனாய், ஒவ்வொரு நிமிஷமும் பெரிய ஆபத்தை எதிர்பார்க்கிறாயென்றே நினைக்கிறேன்." என்றான்.

இதைக்கேட்டதும், கமலம் திடுக்கிட்டாள். உடனே விம்மி விம்மி அழலானாள். கடைசியில், தடுமாற்றத்துடன் பரிதாபப்படத்தக்க குரலில்,

"அத்தான்! நீங்கள் சொல்லுவது வாஸ்தவமே. அவன் என்னுடைய சத்துருவேயொழிய வேறல்ல." என்று கூறவே பாலகிருஷ்ணன், பதறிய மனதுடனும், வீராவேசத்துடனும்,

"ஹா! என்ன சொன்னாய்? உன் சத்துருவா? ஆனால் அவன் உன்னை என்ன செய்யமுடியும்?" என்று கேட்க, கமலம் மேலும் அழுதவண்ணம்,

"அத்தான்! நான் உங்களைக் காதலிப்பதுபோலவே, நீங்களும் என்னைக் காதலிக்கிறீர்களென்று நம்புகிறேன்......" என்று அவள் மேலே பேசுமுன், பாலகிருஷ்ணன்,

"ஆனால், அதில் உனக்குச் சந்தேகமுண்டோ?" என்று பிரமையுடன் வினவினான்.

கமலம்:— "அப்படியிருக்கும்பக்ஷத்தில் அப்பாபி என்னைப்பற்றி உங்களிடம் எதைச் சொன்னபோதிலும், நீங்கள் நம்பமாட்டீர்களென்று நினைக்கிறேன்."

பால:— "கமலம்! நீ பேசப்பேச என் பயம் அதிகரிக்கின்றது. என் காதலி! அவன் உன்னைப்பற்றி என்ன சொன்னபோதிலும், நான் நம்பமாட்டேனென்பதையும் தவிர, அப்படி அவன் ஏதேனும் அதிகப்பிரஸங்கித்தனமாய் பேசும்பக்ஷத்தில், அதே நிமிஷம் அவனுடைய நாக்கை யறுத்துவிடுவேன்."

கமலம்:—(நடுநடுங்கி, பாலகிருஷ்ணனுடைய கைகளைப் பற்றிக்கொண்டு, கெஞ்சிய குரலில்) "அத்தான்! இதுவரையில் நான் உங்களுடன் பிடிகொடுத்துப் பேசாததற்குக் காரணம் இதுவே! நீங்கள் என் நிலைமையை

அறிந்ததும், அவன்மீது கோபங்கொண்டு, அவனைச் சண்டைக்கிழுப்பீர்களென்பது எனக்கு நன்றாய்த் தெரியும். அத்தான்! வேண்டாம்! வேண்டாம்! அவனுடன் வம்புசெய்யாதீர்கள்!"

பால:—(பற்களைப் பயங்கரமாய்க் கடித்துக்கொண்டு) "ஹா! கமலம்! இப்பயல் இவ்விதம் விஷமம் செய்வதற்கு நான் இடங்கொடுக்க மாட்டேன். இதோ சென்று அவனைத் தண்டிக்காமல் விடேன்." என்று ஆவேசங்கொண்டவன்போல் தன்னிடத்தைவிட்டுக் கிளம்ப, கமலம், தன் சரீரம் நடுங்க, பயந்த பார்வையுடன், அவனைப் போகமுடியாமல், கட்டிக்கொண்டு,

"அத்தான்! உங்களைக் கெஞ்சுகிறேன். நீங்கள் அவன் கோபத்தைக் கிளப்பும்பக்ஷத்தில் அதே நிமிஷம் நான் கைது செய்யப்படுவேன்." என்று கதறினாள்.

* * * * *

சபேசன், வக்கீல் தாண்டவம்ஐயரிடம் வேலைக்கமர்ந்து, ஒருமாதத்திற்கு மேலிருக்கும். தாண்டவம் ஐயர், தாம் வாக்குக்கொடுத்தபடியே, அவனையும் தம் புத்திரன்போல் பாவித்து நடத்திவந்தார். இன்னும் அதற்குள் சபேசனும், ராஜேந்திரனும், ஒருவர்மேல் மற்றொருவர் அளவுகடந்த பிரியங்கொண்டு, சகோதரர்களைப்போலவே காணப்பட்டார்கள். நிற்க அவர்களுடைய தங்கைகளாகிய, ராஜமும், ஜானகியும், தினந்தோறும் ஒருவரையொருவர் சந்திப்பதும், பேசுவதுமாயிருந்ததில், அவர்களும் இணையற்ற தோழிகளானார்கள். தாண்டவம் ஐயர், பெண்களுக்குக் குறைந்தது பதினாறு வயது ஆவதற்குமுன், விவாஹம் செய்துவைப்பது பிசகென்று அபிப்பிராயப்பட்டவராகையால், அவருடைய பெண் ஜானகிக்கு இன்னும் விவாஹமாகவில்லையென்பதை நம் நேயர்களே அறிவார்கள். நிற்க, அப்பெண்மணியின் மனோநிலைமையைக் கவனிப்போம்.

சபேசனைக் கண்டதிலிருந்து, ஜானகியின் மனது அவனையே நாடிநின்றது. இன்னும் காதலாகிய வலையிற் சிக்குண்ட பெண்களிடத்தில் காணப்படும், பல சின்னங்களும் வித்தியாஸங்களும் அவளிடம் வரவர தென்பட்டன. சபேசன் வரும் சமயத்தை ஆவலுடன் எதிர்பார்த்தவண்ணமிருப்பாள். அவனைக் கண்டதும் அவளுடைய வதனம் மலர்ந்து, அதில் சந்தோஷத்தின் குறிகள் மிகவும் காணப்படும். கடைசியில், அவன், தன் வேலை முடிந்து, வீட்டிற்குச் சென்றதும், மறுபடியும் அவன் எப்பொழுது வருவானோ என்று ஏக்கங்கொண்டு, அதுவரையில் அவள் உற்சாகத்துடன் செய்துவந்த கார்யங்களில் மனம் சற்றும் ஈடுபடாமல், அவனைப் பற்றியே சிந்தித்தவண்ணம், தன் அறையில் பிரமைகொண்டவள்போல் உட்கார்ந்திருப்பாள்.

இன்னும், சபேசன், அவளப்படித் தன்மேல் பிரியப்படுகிறாளென்பதை அறியாதவனல்ல. ஆனால் அவ்விஷயம் கவலைக்குள்ளாக்கியதென்றே சொல்லவேண்டும். பல இடங்களில், தனவந்தர் வீட்டுப் பெண்மணிகள், தங்கள் வீட்டிலிருக்கும், அழகியவர்களும் ஆனால் எளிய குடும்பத்தில் உதித்தவர்களுமாகிய வாலிபர்கள்மீது மோகங்கொள்ள, அதன்பலனாய், அப்பெண்மணிகளின் பெற்றோர்கள், தங்களுடைய புதல்விகளின் மனோபாவத்தைச் சற்றுமறியாமல், அவர்கள் பிரியப்பட்ட அவ்வாலிபர்கள்மேல் சந்தேகங்கொண்டு அவர்களை அவமானப்படுத்தி, தங்கள் வீட்டைவிட்டு அடித்துத் துரத்தியிருப்பதைச் சபேசன் நன்கறிந்தவனாகையால் அவன் தற்சமயம் மனங்குழம்பியது நியாயமே.

ஒருநாட்காலை, அவன் இதைப்பற்றிச் சிந்தித்தவண்ணம், தன் அறையில் உட்கார்ந்துகொண்டிருந்தான். "என்ன ஆச்சர்யம்! லக்ஷாதிபதியின் வீட்டிற் பிறந்த இப் பெண்மணி, இன்று அவள் தந்தையால் இவ்வேலையிலிருந்து நீக்கப்படும்பக்ஷத்தில், நாளைச் சாப்பாட்டிற்கு வழியற்ற என்மேல் ஆசைப்படுவது எவ்வளவு பரிதாபப்படத்தக்கது;

னவே, தற்சமயம், அவளுக்கு என்மேலிருக்கும் மோகம் மேலும் அதிகரிக்க நான் இடங்கொடுப்பது மிகவும் ஆபத்திற்கிடம்." என்று தீர்மானித்துக்கொண்டே, கடைசியில், தன் வேலைக்குப் போகநேரமாய்விட்டதைக் கண்டு, அவசரத்துடன் தாண்டவம்ஐயருடைய வீட்டை நோக்கி நடந்தான். ஆனால், அவன் தாண்டவம்ஐயருடைய அறைக்குள் நுழைந்தபொழுது, அவர் தம் நண்பர் ஒருவருடன் சம்பாஷித்துக்கொண்டிருப்பதைக் கண்டு, என்ன செய்வதென்று தெரியாமல் கொஞ்சநேரம் தயங்கியவண்ணம் நின்றான். இன்னும், அவர்கள் பேசிக்கொண்டிருந்தது, ஜானகியின் விவாஹத்தைப்பற்றியே என்பதை அறிந்துகொண்டான்.

அவன் தான் எவ்விதத்திலும் அப் பெண்மணியை அடைவது முடியாத கார்யமென்பதை அறிந்தபோதிலும், அவளப்படி வேறொருவனுக்கு ஏற்பாடு செய்யப்படுவதைக் கண்டதும், அவனுடைய அழகிய முகத்தில் விசனக்குறிகள் தோன்றின. பிறகு மேலும், தான் அங்குத் தாமதிப்பது பிசகெனநினைத்து, அவ்வறையை விட்டு வெளியே போகுந்தறுவாயிலிருந்தான். அச்சமயம், தாண்டவம் ஐயர், அப்பக்கம் திரும்பி, அவனைப் பார்த்ததும்,

" அப்பா! நான் இப்பொழுது ஒரு முக்கிய கார்யத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருப்பதால், நீ ஒருமணி நேரங் கழித்து வந்தால் சௌகர்யமாயிருக்கும்." என்று சொல்ல, சபேசன் சரி எனச் சொல்லிவிட்டு, வெளியே சென்றான். ஆனால் அந்த ஒருமணி சாவகாசத்தைத் தன் தோழனாகிய ராஜேந்திரனுடன் கழிக்க நினைத்து, அவ்வறைக்குச் சென்றவன், அது சாத்தப்பட்டிருப்பதைக் கண்டு, திரும்பும் சமயம் திடுக்கிட்டான். அதற்குக் காரணம், அவ்வறைக்குள், யாரோ, விசித்து விசித்து அழும் சப்தம் அவன் செவிகளில் விழுந்தது; பிறகு, தன்னைத்தானே, கட்டுப்படுத்த முடியாதவனாய், அவ்வறையின் கதவைத் திறந்து உள்ளே எட்டிப் பார்த்தவன் மறுபடியும் திடுக்கிட்டான்.

அவனுக்குண்டான ஆச்சர்யத்திற்கு அளவில்லை. ஏனென்றால், அங்கு அவன் கண்டது ஜானகியேயொழிய வேறல்ல; அப் பெண்மணி, தன் முகத்தைத் தன் இருகரங்களாலும் மறைத்துக்கொண்டு, தேகங்குலுங்க அழுதுகொண்டிருந்தாள்.

" ஓஹோ! இவள் என்னைக் காதலிப்பதால், தற்சமயம், கீழே தன் விவாஹத்தைப்பற்றிய ஏற்பாடுகளை அறிந்து, என்னசெய்வதென்று தெரியாமல் கஷ்டப்படுகிறாள்." என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். ஆனாலும், எதையும் அறியாதவன்போல்,

"அம்மா! நீ இப்படி வருத்தப்படுவதின் காரணமென்ன?" என்று பிரியத்துடன் வினவ, ஜானகி, திடுக்கிட்டவளாய், எழுந்து நின்றாள். ஆனால் தன் வாயைத் திறக்காமல், சபேசனுடைய முகத்தை ஆவலுடன் உற்று நோக்கியவண்ணமிருந்தாள். அவளுடைய தடுமாற்றத்தைக் கண்ட சபேசன், மறுபடியும், அவளழுவதின் காரணத்தைக் கேட்க, அப் பெண்மணி தன் குழப்பத்தை மிகவும் வியக்கத்தக்கவிதம் அடக்கிக்கொண்டு தைர்யத்துடன்,

"இப்பொழுது நீங்கள் என் தந்தையின் அறையிலிருந்தே வருகிறீர்களென்று நம்புகிறேன்?" என்றாள். சபேசன், 'ஆம்.' என்பதற்கு அடையாளமாகத் தன் தலையை அசைக்க, ஜானகி,

"அங்கு நடக்கும் விஷயம் உங்களுக்குத் தெரிந்திருக்கவேண்டும்?" என்றாள்.

சபேசன் :—" ஆம்! நன்றாய்த் தெரியும்."

ஜானகி :—" அது தெரிந்துமா நான் அழுவதின் காரணத்தைக் கேட்கிறீர்கள். சரி! நீங்கள் என்னைச் சோதிக்கிறீர்களென்பதில் ஐயமில்லை. ஆனால், நான் பச்சைக் குழந்தை அல்ல; இன்னும், இவ்விஷயத்தைப் பற்றி உங்களுடன் பேச வெட்கப்பட, நான் கிராமாந்தரத்தில் பிறந்து வளர்ந்தவளல்ல."

சபேசன் :—“ஜானகி! நீ பேசுவதின் அர்த்தம் எனக்கு விளங்கவில்லையே!”

ஜானகி:—“ஆஹா! உங்களுக்கு அர்த்தம் விளங்காமலில்லை. இப்படி நீங்கள் பாசாங்கு செய்வதற்குக் காரணம், விஷயத்தை என் வாயிலிருந்தே பறிக்க ஆசைப் படுகிறீர்கள்.”

சபேசன் :—“வாஸ்தவமே! தற்சமயம் உன் மனதிலிருப்பதை நான் நன்கறிவேன். ஜானகி! ஆனால் நீ என்னை மறந்துவிடுவதே நலமென்று நினைக்கிறேன்.”

ஜானகி :—“ஏன்? அதற்குக் காரணமென்ன?”

சபேசன் :—“அம்மா! நானிப்படிப் பேசுவதற்குக் காரணம், எனக்கு உன்மேல் பிரியமில்லை என்பதல்ல. ஆனால் வாஸ்தவத்தில் நான் உன்னை அடைய ஆசைப் படும்பக்ஷத்தில், அது முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படுவதுபோலாகும்.”

ஜானகி :—“உங்களுடைய உவமானம் இங்குச் சற்றும் ஏற்றதாக எனக்குத் தோன்றவில்லை.”

சபேசன் :—“ஏன்?”

ஜானகி :—“நான் ஒரு தனவந்தரின் புத்திரி,என்ற காரணத்தால் என்னைக் கொம்புத்தேனுடனும், அந்த ஐச்வர்யம் உங்களுக்கில்லாததால், உங்களை முடவனுடனும் ஒத்திட்டுப் பேசிவிட்டீர்கள். ஆனால் இச்செல்வமானது யாரிடத்திலும் சாசுவதமில்லை. இன்று லக்ஷாதிபதியாய் இருப்பவர் நாளைக்குத் தெருவில் பிச்சை வாங்கவேண்டிய ஸ்திதிக்கு வரக்கூடும்; இன்னும் இந்நிமிஷம் பரமதரித்திரனாய் இருப்பவன், மறு நிமிஷம் கோடீசுவரனாகக்கூடும். நான் சொல்லிய இவைகள் உண்மை என்பதை நான் படித்திருக்கிற,

“அகடற யார் மாட்டும் நில்லாது செல்வம்
சகடக்கால்போல வரும்.”

“உடைமையும் வறுமையும் ஒருவழிநில்லா.”
“குடைநிழலிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
நடைமெலிந்தோரூர் நண்ணினும் நண்ணுவர்.”
“அறத்திடு பிச்சைக் கூவி இரப்போர்
அரசோடிருந்து அரசாளினும் ஆளுவர்”

என்னும் நீதிவாக்கியங்களும் உறுதிப்படுத்துகின்றன. எனவே, தற்சமயம் நீங்கள் கொஞ்சம் தாழ்ந்த ஸ்திதியிலிருந்தபோதிலும், தெய்வானுக்கிரஹம் இருக்குமானால், சீக்கிரம் நல்ல பதவிக்கு வந்துவிடலாம். அதன் பலனாய் நீங்களும் கொம்புத்தேனாய் விடமுடியும். ஆனால் ஒருதரம் தன் காலை இழந்த நீங்கள் சொல்லும் முடவன் எக்காரணத்தைக்கொண்டும், தன் காலை மறுபடியும் அடையமுடியாது.”

அவளுடைய வாக் சாதுர்யத்தைக் கண்ட சபேசன் அப்படியே பிரமித்து நின்றான். ஜானகி மேலும் பேசலானாள்.

“இன்னும், நீங்கள் பெண்களின் சந்தோஷத்திற்கு முக்கிய காரணம் இப்பாழும் பணமே என்று நினைத்துப் பேசுவதைக் காண எனக்கு மிகவும் ஆச்சர்யமாயிருக்கிறது. சரி இருக்கட்டும்; ஒரு பெண், ஒரு கோடீசுவரனுக்கு வாழ்க்கைப்படுவதாகவே வைத்துக்கொள்ளுவோம். ஆனால் அப்புருஷன், அவளை வாஸ்தவத்தில் காதலிக்காமலும், இன்னும் ஆணாய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் மிகவும் அவசியமான, குணாதிசயங்கள் வாய்ந்தவராயில்லாமலும் இருக்கும்பக்ஷத்தில், அவருடைய கோடிக்கணக்கான ஐச்வர்யத்தினால் அப் பெண் அடையக் கூடிய லாபம் எள்ளளவும் உண்டோ? எனவே, பெண்களுக்கு முக்கியமானது, அவர்களுடைய பர்த்தாவின் காதலும், பௌருஷமுமே ஒழிய வேறல்ல.”

சபேசன் :—(சிரித்துக்கொண்டே) “சபாஷ்! நீ ஒரு வக்கீலுடைய பெண்ணென்பது இப்பொழுதுதான் தெரிகிறது. சரி; ஆனால் புருஷலக்ஷணம் என்று நீ கரு

தும் அக் குணாதிசயங்கள் எனக்கிருக்கவேண்டியது அவசியமல்லவா ?"

ஜானகி :—" அவைகள் உங்களிடமிருக்கின்றனவா, இல்லையா என்பதைப் பிறர் அறியக்கூடுமே ஒழிய உங்களாலறியமுடியாது."

சபேசன்:—"சரி! அவைகளிருப்பதாகவே வைத்துக்கொள்ளுவோம். நானும் உன்னைக் காதலிக்கவேண்டியது அவசியமல்லவா ?"

ஜானகி :—" ஆஹா ! நீங்கள் இப்படி என் வாயைக் கிளறுவது அழகல்ல. சரி இருக்கட்டும். சற்று நேரத்திற்கு முன்பு, நான் உங்களைக் காதலிக்கிறேனென்றும், ஆனால் நான் உங்களை மறந்துவிடுவதே நலமென்றும் சொன்னீர்களே. உவமையுங் கூறினீர்களே. நான் உங்களைக் காதலிக்கிறேனென்பதை எப்படி அறிந்துகொண்டீர்கள் ?"

சபேசன் :—" அதை நான் உன் முக ஜாடைகளிலிருந்தே கண்டுகொண்டேன்."

ஜானகி :—" அப்படியானால், உங்களுடைய முகஜாடைகளிலிருந்து, உங்கள் மனதிலிருப்பதை நான் அறிய முடியாதோ ? உலகத்தில், கொலைபாதகர்களும், தங்கள் குற்றத்தைத் தங்கள் முகங்களிலிருந்து மறைத்துக்கொள்ளக்கூடும். ஆனால், காதலின் வலையில் சிக்குண்ட எவரும், தங்கள் ரஹஸ்யத்தை மறைத்துக்கொள்ள முடியாது. வாஸ்தவமாக, இன்று காலை 9 மணிவரையில் நான் உங்களுடைய மனதிலிருப்பதை அறிய முடியவில்லை. ஆனால், சற்று நேரத்திற்கு முன், நீங்கள் இவ்வீட்டிற்குள் நுழையும்பொழுது, நான் மாடியிலிருந்து கவனித்துக்கொண்டிருந்தேன். அச்சமயம், நீங்கள் என்னைப் பற்றியே நினைத்துக்கொண்டிருந்தீர்களென்பதில் ஐயமில்லை. இன்னும், நீங்கள் உடனே என் தந்தையுடைய அறைக்குப் போவீர்களென்றும், அங்கு நடக்கும் என் விவாஹத்தைப் பற்றிய சம்பாஷணையை எப்படியும் கேட்பீர்களென்றும், எனக்குத் தெரியுமாகையால், அதைக் கேட்டதும், நீங்கள் திடுக்கிட்டு விசனமடைகிறீர்களா அல்லது இது எப்படிப் போனால் நமக்கென்ன என்று போய்விடுகிறீர்களா என்று அறிய ஆவல்கொண்டு நீங்கள் அவ்வறைக்குள் நுழைந்ததும், பக்கத்தில் ஒரு மறைவில் நின்றுகொண்டு, உங்களுடைய முகத்தைக் கவனித்தவண்ணமிருந்தேன். ஆஹா ! அதைக் கேட்டதும், உங்கள் முகம் வெளுத்து வாட்டமடைந்ததை நான் பார்க்கவில்லை என்று நினைக்கவேண்டாம். பிறகு ஒருநிமிஷ நேரம், பிரமித்து, அப்படியே சிலைபோல் நின்றீர்கள். அதற்குக் காரணமென்ன ? எங்கே! என் முகத்தைப் பார்த்து, சொல்லுங்கள் பார்ப்போம்."

இதைக் கேட்டதும் சபேசன், கல்லாய்ச் சமைந்தவன்போல, ஜானகியின் முகத்தை உற்றுநோக்கியவண்ணம், கொஞ்சநேரம் நின்றான். அவனுடைய ஹிருதயம் துள்ளித் துள்ளி விழுவதுபோலிருந்தது ; பிறகு, ஆத்திரத்துடன் அவளை அணுகி, பிரியத்துடன் அவளுடைய கரங்களைப் பற்றிக்கொண்டு, காதலொழுகும் குரலில்,

" ஜானகி ! நீ சொல்வது வாஸ்தவமே." என்றான். மேலே பேச அவனால் முடியவில்லை.

ஜானகியின் கண்களில் ஆநந்தபாஷ்பம் சொரிந்தது ; அவள், தாழ்ந்த குரலில்,

" நான் இவ்வளவு நேரம், இதைப்பற்றி இவ்வளவு தைரியத்துடன், பேசியதைக் கண்டவர்கள், நான் ஒரு வெட்கமற்ற அதிகப்பிரஸங்கி என்று நினைக்கக்கூடும். ஆனால், இச்சமயம், இதை நான் என் மனதிலேயே வைத்துக்கொண்டு சும்மா இருந்துவிடும்பக்ஷத்தில், அதனால் வரக்கூடிய லாப நஷ்டத்திற்கு, நானே முக்கியமாய்ப் பாத்தியப்பட்டவளாகையாலும், இன்னும், உங்களுடைய உதார

குணத்தையும், உங்களுக்குப் பெண்களைப் பற்றியுள்ள தாராளமான அபிப்பிராயங்களையும், நான் நன்கறிந்தவளாகையாலும், அப்படியே நான் பேசியதில் ஏதேனும் பிசகிருந்தபோதிலும், நீங்கள் என்னை மன்னித்துவிடுவீர்களென்ற பூர்ண நம்பிக்கை எனக்குண்டு. ஆனால், நான் என் மனோபீஷ்டத்தை என் தந்தையிடம் முதலில் தெரிவித்திருக்கவேண்டுமென்று நீங்கள் எண்ணலாம். நான் அப்படிச் செய்யாததற்குக் காரணம், உங்கள் மனதிலிருப்பதை அறியாமல், அவரிடம் போவதில் பிரயோஜனமில்லை என்று நினைத்தேன். தவிர, பெண்களுக்கு, தன் பெற்றோர்களைக் காட்டிலும், தங்களுடைய காதலர்களிடம் நம்பிக்கையும் தைர்யமும் அதிகமிருப்பது சகஜமே." என்றாள். சபேசன், தடுமாற்றத்துடன்,

"ஜானகி! இதைப்பற்றி நாம் மேலும் பேசவேண்டிய அவசியமில்லை. ஆனால், உடனே, இதைப்பற்றி உன் தந்தைக்கு இருக்கக் கூடிய அபிப்ராயத்தை நாம் முதலில் தெரிந்துகொள்ளவேண்டும்." என்று கூறவே, ஜானகி, உறுதியுடன்,

"அவரைப்பற்றி நீங்கள் சிறிதும் கவலைப்படவேண்டாம்—" என்று அவள் சொல்லிக்கொண்டே இருக்கையில், "ஆம்! வாஸ்தவமே." என்ற சப்தம் கேட்க, காதலர்களிருவரும் திடுக்கிட்டு, விலகினார்கள். மறுநிமிஷம் வக்கில் தாண்டவம் ஐயர் உள்ளே நுழைந்தார். அவர் தம் புதல்வியை அன்புடன் அணைத்துக்கொண்டு,

"அம்மா! நீ இவ்விதம் மனங் குழம்பச் சற்றும் காரணமில்லையே; நான் உன் விவாஹத்தைப்பற்றி பேசிக்கொண்டிருந்ததைக் கண்டு பயந்துவிட்டாய் போலும். என் அருமைக் குழந்தாய்! நான் உனக்காக நிச்சயித்து, பேசிக்கொண்டிருந்த வாலிபன் அதோ நிற்கும் சபேசனைத் தவிர வேறல்ல." என்று சபேசனை அணுகிப் பிரியத்துடன்,

"அப்பா! உங்கள் சம்பாஷணை முழுவதையும் நான் கேட்டுக்கொண்டிருந்தேன். நாம் ஒரு எளிய குலத்தில்

188769

கற்புள்ள இந்திரா.

ACT 1.

SCENE I.

இடம் :—

மஹேந்திரபுரியில் ரவிந்திரநாத் மாளிகையில் பின்பக்கத்திலுள்ள தோட்டம்.

பாத்திரங்கள் :—

ரவிந்திரநாத்பாபுவின் ஏகபுத்ரன் சுரேந்திரன் தனது ஆப்தநண்பனாகிய இந்திரகுமாருடன் பேசிக்கொண்டு உலாவுகின்றான்.

காலம் :—

சாயங்காலநேரம்.

இந்திரகுமாரன். நண்பா! சுரேந்திரா! சர்வபோகங்களுடன் வசிக்கக்கூடிய நீ இல்லறத்தை மேற்கொள்ளாது இவ்வித ஆடையுடுத்து உன் வாழ்நாட்களை கழித்து வருவதை காண என்மனம் என்ன பாடு படுகின்றது தெரியுமா? நான் எவ்வளவு தரம் இல்லறத்தின் மேன்மையை எடுத்துச் சொல்லியும் செவி சாய்க்காது, ஒரேபிடிவாதமாக ஸ்திரீகளின் மனதைக் கண்டோர் ஒருவருமில்லை என்பதை கடைபிடித்து வருகின்றனை. இது தகாது. வீணில் பிறர்மனம் நோகும்படி நடவாதே. சிறுவயதுமுதல் நீயும் நானும் பழகி வருவதால் நீ என்ன கோபித்தபோதிலும் உனக்கு தினே தினே இதைப்பற்றி கூறிவருகின்றேன். நண்பா, இன்றாவது உன்மனம் இளகுமா?

சுரேந்திரன்— குமாரா! நீ எவ்வளவுதான் கூறியும் என் மனம் சிறிதும் மாறியபாடில்லை. இன்று நீ ஆஸ்பத்ரி

சென்றிருந்தாயே, என்பிதாவின் நிலை என்னவாக இருக்கின்றது? அவரைப்பற்றி என்ன சொல்கின்றனர்? இன்றாவது, அவர் என்னை அவரிடம் அழைத்து வருமாறு கூறினாரா? விஸ்தாரமாகச் சொல்வாய் நண்பா!

இந்திரகுமார்— நேசா! உன்தந்தையின் வியாதி என்னவென்பதை நீ அறியாயோ? உன்னை அவர் காணாதிருப்பதின் நோக்கம் உனக்கு விளங்கவில்லையோ? இவ்வளவு தூரம் படித்திருந்தும் நீ டாக்டர் பரீக்ஷையில் தேரி அன்னியர்களுக்கு உதவிவந்தும், கியாதி பெற்றிருந்தும், ன்னைக்கூப்பிடாமலும், வீட்டில் படுக்காமலும், ஆஸ்பத்திரியில் போய் படுத்ததின் உட்கருத்தை நீ அறியவில்லையோ? அறிந்தும் தான் நமதெண்ணப்படி நடப்போமென்று இருக்கின்றாயோ? உன்மனம் தான் என்ன கல்லா? கல்லும்கூட கரையுமென்பார்களே! மித்ரா உன்தந்தையை இதுகாறும் உயிருடன் வைத்திருப்பது யாரென உனக்குத்தெரியுமா?

சுரேந்திரன்— கேட்டகேள்விக்கு பதில்கூறாமல் உன்மனத்தையே வெளியிடுகின்றாய்! உனக்கு பதில்கூற விருப்பமில்லை போலும்! நண்பா அன்று சம்பந்தம் இயற்றிய லீலாவதி சுலோசனா நாடகம் பார்க்கச் சென்றிருந்தோமே! லீலாவதியின் குணத்தைக் கண்டும் உனக்கு நான் இல்லறமேற்கொள்ள வேண்டுமென்றவிருப்பம் இருக்கின்றதா?

இந்திரகுமாரன்— நன்கு ஞாபகமூட்டினாய். உன்னை லீலாவதிபோலுள்ள மாதை விவாஹம் செய்து கொள்ளும்படி ஒருவரும் கூறார்கள். அவளைப்பற்றிக்கூறிய உனக்கு மற்ற ஒருமாது சுலோசனாவின் ஞாபகம் வரவில்லையோ? அவள்மாதிரி ஓர் மாது அகப்படின் நீ ஏன் மணம் புரியலாகாது? நண்பா, அப்பேற்பட்ட மாது இருப்பின் உனக்கு ஆக்ஷேபணை இராதே?

இவ்வொருவார்த்தை கூறு, அதுஒன்றே எங்களை வருக்கும் அளவிலா ஆனந்தத்தைக்கொடுக்கும். அன்று மனம்தடுமாற்றம் ஏற்பட்டு ஆஸ்பத்திரியில் கிடக்கும் உன்தந்தையும் பெருமகிழ்ச்சி அடைவார். நண்பா, உன்பதிலை மிக்க ஆவலுடன் எதிர்பார்க்கின்றேன். சீக்கிரமே விடையளிப்பாய்.

சுரேந்திரன்—(மிகுந்தகவலையுடன் கையை உதறிக்கொண்டு) ஹா! நான் என்ன சொன்னேன்! ஐயோ வாய்தவரி இவ்விதவார்த்தை வரவேண்டுமா! வெறும்வாயை மெல்லுகிறவர்களுக்கு அவல் அகப்பட்டால் கேட்கவும் வேண்டுமா? இதுவரை நான் கொண்டிருந்த எண்ணங்களெல்லாம் இவர்கள் விருப்பத்திற்கு இணங்கின் என்னவாவது. ஈசா, இதுவோ என்விதி! இவனுக்கு என்னபதிலுரைப்பது.?

திக்பிரமைகொண்டவன் போல் நிற்கும் சமயம் உமேஷ் என்னும் வேலையாள் சுரேந்திரனுக்கு ஓர்கடிதம் கொண்டுவந்து கொடுக்கின்றான். அதைவாசித்து,

நண்பா! தீர்ந்தது என்பாடு! இதுகாறும் செல்லமாய் வளர்ந்துவந்த என்னை என்பிதா இவ்வுலகத்திற்கு காட்டிக்கொடுத்துவிட்டுச் செல்லப்போகிறார்! ஐயோ! இனியான் என்ன செய்வேன். ஐயோ! இச்சமயத்திலாவது அவரைப்போய்ப் பார்ப்போமென்றாலோ! அதுவும் ஓர் நிபந்தனை ஏற்படுத்தியிருக்கின்றார் நண்பா! அவர் பிராணன் போகுமுன்பாவது அவரை நான் பார்வையிடலாகாதா! ஐயோ! ஐயோ! நண்பா, இதற்கு நீதான் ஏதாவது வழி சொல்ல வேண்டும்.

இந்திரகுமாரன்— சுரேந்திரா! மனம் தளர்வடையாதே, என்ன எழுதியிருக்கின்றார்? அதைச்சற்றுக்கூறு, சொல்லக்கூடியிதாயிருந்தால்.

சுரேந்திரன் தன்கையிலிருக்கும் கடிதத்தை இந்திரகுமாரிடம் கொடுக்க. அவன்வாசித்து,

நண்பா ! சரி இனி ஒரேவழிதான் உண்டு ! அதன்படி நடப்பதுதானே. அவர் அந்தியகாலத்திலாவது தன் மகன் மனம்திரும்பி தன்னிஷ்டப்படி நடக்கின்றான் என எண்ணம் மேலிட்டு மேலுலகம் செல்லட்டுமே ! இதைவிட நாம் நம்மை ஈன்ற தாய் தந்தையருக்கு வேறென்ன செய்யப்போகின்றோம் ! அதுவும் அவர் விருப்பம் ஞாயமுள்ளதாகவேயிருக்கின்றது.

சுரேந்திரன்— உங்களுக்கெல்லாம் கொண்டாட்டம், எனக்கு திண்டாட்டம் ! என் மனத்தை மாற்ற நல்லசூழ்ச்சி செய்திருக்கின்றீர்கள். சாஹஸத்தில் பெயர்போனவர்கள் ஸ்திரிகளெனவாக்கியம். அதை மேற்கொண்டீர்களோ நீங்கள் ? நல்லது, எல்லாம் வேளைக்குச் சேரும் !

இந்திரகுமாரன்— எல்லாம்சரிதான் அவர்தான் என்ன சொல்கின்றார் ! குலம் நசிக்காமலிருக்க உனக்குப்புத்ர ஸந்தானம் ஏற்படவேண்டுமென்கிறார் ! பிள்ளைபிறக்காவிடில் உனது மூதாதைகள் 'புத்' என்னும் நரகில் வீழ்த்தப்படுவார்கள் என்பதை நீ கேட்டதில்லையோ ? அன்று நாம் கண்டலீலாவதி சுலோசனா நாடகத்தை ஞாபகப்படுத்திக்கொள்ளேன் !

சுரேந்திரன்— ஆனால் நீ என்னை ஸ்ரீதத்தனாக நடிக்கச்சொல்கின்றாயோ ? என் தந்தையின் நிமித்தம் எனது எண்ணத்தை மாற்றி அவ்வுடன்பாட்டுக்கு ஒப்புக்கொள்கின்றேன். நண்பா ! வருகின்றாயா என்னுடன், இருவருமே செல்வோம் ?

இந்திரகுமாரன்— இனியும் தாமதிப்பேனா ? வா, சீக்கிரமே போவோம்.

இருவரும் போகின்றனர்.

SCENE II.

இடம் :—

நர்ஸாக இருந்து வரும் இந்திராவின் விடுதி.

பாத்திரங்கள் :—

நர்ஸ் இந்திரா. பின்வரும் வண்ணம் யோசித்து நிற்கின்றாள்.

காலம் :—

பகல் இரண்டுமணி சுமார். ஞாயிற்றுகிழமை.

இந்திரா— என் தந்தை தாய் இன்னாரென நான் அறிந்திலேன் ! என்னை வளர்த்துவந்த செவிலித்தாயும் என்னை இத்தொழிலில் பழக்கவிட்டு இவ்வாஸ்பத்ரி துரைசாணியிடம் என்னை விட்டுவிட்டுச்சென்றனள். இந்நாலைந்து வருஷங்களாக என் தொழிலிலேயே கவனம் செலுத்தி அதை சரிவரச்செய்வதில் பெரும் மகிழ்ச்சி கொண்டு நடத்திவருகின்றேன் ! நான் என்வாழ்நாட்களை தனிமையாகவே கழிக்கவேண்டுமோ ? மற்றவர்கள் இல்லறம் நடத்தும் விதம் நான் நடத்தல் சரியல்லவோ ? இப்பதினாறு வருஷகாலமாக எனக்கு விவாஹமாகவில்லை ! இனியும் இவ்விதமே காலம் கழிந்துவிடுமோ ! ஆனால் நான் எவ்விதமேனும் ஓர் புமானை படையவேண்டுமென ஓர் எண்ணம் எனக்கு உண்டாகி இருக்கின்றது. எவ்விதமானவனாக இருக்கவேண்டுமென்று யோசித்ததில் அன்று லீலாவதி சுலோசனா நாடகத்தில் லீலாவதி சொன்ன விதம் புருஷனாக வருபவன் நல்லலக்ஷணமுள்ளவனாகவும், படித்தவனாகவும், பெருத்த ஐஸ்வரியமுடையவனுக்கு ஏகபுத்ரனாகவும் இருக்கவேண்டுமே ஒழிய வேறெவ்விதமாக இருத்தலும் தகாது எனத்தோன்றுகிறது. ஐஸ்வரியமிருப்பின் நாம் சுகப்படலாம் ! இல்லையேல், காலம் முழுதும் கஷ்டம்தான் ! என் மனம் அப்பேர்ப்பட்ட புருஷனையே நாடுகின்றது ! என்செய்வேன் ?

சற்றுயோசித்து,

இதுவரை ஆஸ்பத்ரியில் நான் நர்ஸ்பண்ணிக்கொண்டிருந்து அன்று திடீரென மரணமடைந்த ரவிந்திரநாதர் மிக்கசெல்வந்தர் எனவதந்தி. அவருக்கு ஏகபுத்ரன் இருப்பதாயும், அவன் விவாஹமே வேண்டாமென்று இதுகாறும் சொல்லிவந்ததாயும், தந்தை இறக்கும் தருணம் அவன் பார்வையிடவந்தக்கால் விவாஹம் செய்துகொள்ள ஒப்புக்கொண்டதாயும், வதந்தி. அவ்வதந்தி உண்மையாயிருப்பின், நாமேன் அவனை மணக்க ஏற்பாடு செய்யலாகாது? அவரும் படித்தவர், நல்ல லக்ஷணமுள்ளவர், அளவற்ற ஆஸ்திக்கு சொந்தக்காரர், அன்று அவரது நண்பர் இந்திரகுமாரர் என்னை அவரிடம். introduce செய்தபொழுது அவர்பார்த்தபார்வை, என்மனத்தை அவரிடம் இழத்ததுச்சென்றது. அதனாலன்றோ, அவர் அன்று எனக்கு இனமாகத்தந்த ஆயிரம் ரூபாய் நோட்டை பெற்றுக்கொள்ளாமல் உமது அன்பு இருப்பின் போதுமானது எனவும் கூறினேன்! நான் அவரை மணப்பேனேயாயின்!

இந்திரகுமாரன் வருகின்றார்.

Sir, வரவேண்டும். ஏது இன்று இப்பக்கம் வந்தது? என்னை ஒருபொருட்டாக எண்ணி வந்ததைப்பற்றி வந்தனம். உட்காருங்கள்.

இந்திரகுமாரர்— (நாற்காலியில் உட்கார்ந்து) Madam! உன் ஓய்வுநேரத்தை disturb செய்வதற்காக மன்னிக்கவும். எனது நண்பர் சுரேந்திரர் தன் தந்தையை தனக்குபதிலாக அந்தியகாலத்தில் காத்துவந்தபெண்மணியின் வாஸஸ்தலம் எது என்று விசாரித்து வரச்சொன்னார். நானும் ஆஸ்பத்ரிசென்று விசாரித்ததில் இங்கு என்று கூறினர். உன்னை வந்துபார்த்துப் போகலாமெனவே வந்தேன். வேறு விசேஷமொன்றுமில்லை.

இந்திரா— ஐயா! என்னைப்பற்றிக்கவலை யெடுத்துக்கொண்டதற்காக வந்தனம். நான் என்னசெய்தேன் என்னைப்பற்றி விசாரிக்க? என் கடமையைச்செய்தேன். உமது நண்பருக்கு என் மனமார்ந்த வந்தனத்தை தெரிவியும்.

இந்திரகுமாரர்— அப்படியே ஆகட்டும் பெண்ணே! உனக்குத்தாய் தந்தையர் இருக்கின்றனரா? உனக்கு விவாஹமாயிருக்கின்றதா? தாய்தந்தையர் இருப்பின் எங்கிருக்கின்றனர்? நீ எவ்வளவு நாட்களாக இத்தொழிலை மேற்கொண்டிருக்கின்றனை. இவைகள் ஓர் ரகஸியமில்லாவிடில் விடைபகருவாய்.

இந்திரா— ஐயா! உம்மை எனது நண்பர் என பாவித்து என் வரலாற்றை எனக்குத்தெரிந்தவரை கூறுகின்றேன். எனக்கு என்தாய்தந்தை இன்னாரெனத்தெரியாது. எனது எட்டாவது வயதுமுதல் இவ்வாஸ்பத்ரி துரைசாணி அம்மாளிடமே இருந்து வருகின்றேன். ஒருசமயம் அவளை நான் கேட்டபொழுது அதற்கு அவள் என்னை ஆஸ்பத்ரியிலேயே ஓர் செவிலித்தாய் அவளிடம் கொண்டுவந்து கொடுத்ததாய்க்கூறினாளே ஒழிய வேறன்று. அன்றுமுதல் அவ்வம்மணியால் இவ்வேலைக்குப்பழக்கப்பட்டு இதையே மேற்கொண்டிருக்கின்றேன். சமீபகாலமாகத்தான் நான் இவ்வீட்டில் தனிமையாக வசித்துவருகின்றேன். இதுவும் அவ்வம்மணியின் ஏற்பாடே.

இந்திரகுமாரர்— ஆனால் உனக்கு இன்னும் விவாஹமாகவில்லையோ? யரையாவது கல்யாணம் செய்து கொள்ளுவதாக மனத்தில் வரித்திருக்கின்றாயோ?

இந்திரா— ஆம்........இன்னும் விவாஹமாகவில்லை.

இந்திரகுமார்— (aside) என்ன இது 'ஆம்' என்று இழுத்தால்போல் சொல்கின்றாள். ஒருக்கால் நாம் எண்ணிவந்த சமாசாரம் பாழாய்விடுமோ? அப்படிபோமாயின், மற்றோர் முறை அவன் மனத்தை திருப்புவது எவ்விதம்? தந்தையின் கடைசிவார்த்தைக்கன்றோ கட்டுப்பட்டு விவாஹம் செய்து கொள்வதாய் ஒப்புக்

கொண்டு, அதுவும்........
பெண்ணே. உனக்கு சுரேந்திரனைத்தெரியவருமா?

இந்திரா— ஐயா! யாரவர்? நான் இதுவரை வெளிவந்தது கிடையாது. நால்வருடனும் பழகியதில்லை. ஒரே ஒருநாள்தான் எனது துரைசாணியிடம் விடைபெற்று நாடகத்திற்கு சென்றிருந்தேன். நானேனர் கிணற்றுத்தவளை!

இந்திரகுமார்— மிக்கசந்தோஷம். என்றைக்கு வந்திருந்தாய்? அதைத்தெரிவிக்கலாமோ?

இந்திரா— அன்று லீலாவதி சுலோசன நாடகம் நடத்தினார்களே! அன்றுதான்.

இந்திரகுமார்— அன்றைக்கா வந்திருந்தாய்! அன்று நாடக முடிந்தவுடன், ஸ்ரீதத்தர் வேடம் பூண்டவர்மாதரி நல்லாடையின்றி ஓர் சீமான் நாடகமுடிவில் மேடையேறி வந்தனமளித்தாரே! அவரைப்பார்த்திருக்கிறுயா முன்பு.?

இந்திரா— நான் அன்றுதான் அவரைமுதலில் சந்தித்தேன். இரண்டாம் முறையாக, ரவிந்திரநாத் ஆஸ்பத்ரியில் உயிர்துறக்கும் தருணம் அவர் அழுது கொண்டு நிற்பதைக்கண்டேன். உம்மையும் அவருடன் சந்தித்ததாக ஞாபகம். நீரும் என்னை அவரிடம் introduce செய்தீரல்லவா?

இந்திரகுமார்— ஆம் அவர்தான் எனது 'ஆப்தநண்பர் சுரேந்திரர்.

இந்திரா— அப்படியா! அப்பேர்ப்பட்ட ஐஸ்வரியவந்தர் ஏன் இவ்விதக்கோலம் பூண்டிருக்கிறுர்? முகத்தில் ஏதோவித விசாரமும் மேற்கொண்டிருப்பதாகத் தெரிந்தது!

இந்திரகுமாரர்— எல்லாம் காலத்தின் கோலம்தான்!

இந்திரா— என்ன அப்படிக்கூறுகின்றீர்! அவருக்கு என்ன. குறை ஐயா? 'இல்லாளகத்திலிருக்க இல்லாதொன்றில்லை' என ஒளவையார் கூறியவார்த்தை பொய்யாகுமா? எங்கே சென்றனள், அவர் இல்லாள்?

இந்திரகுமார்— சரியாகச்சொல்லினை. இல்லாளில்லாத குறைதான் அவர் அப்படியிருக்கக் காரணம்.

இந்திரா— அப்படியா! ஏன் இன்னும் அவருக்கு விவாஹமாகவில்லை? ஆஸ்தியில்லையா, படிப்பில்லையா, அழகில்லையா, அல்லது அவருக்குத்தான் விவாஹத்தில் மனம் செல்லவில்லையா?

இந்திரகுமார்— பெண்ணே! உன் வாக்சாதுர்யத்திற்கு மெச்சுகிறேன். நீயே அவருக்குத் தகுந்தவள். நீ அன்று அவர்கொடுத்த ஆயிரம் ரூபாய் நோட்டை வேண்டாமென்று கூறினதற்காக மிக்க கவலைகொண்டு வருந்துகின்றுர். எங்கு, தான் கொடுத்தது கொஞ்சமாக இருக்குமோ எனவும் யோசிக்கின்றுர். உனது எண்ணத்தை என்மூலமாக அறிந்து வருமாறும் என்னை இன்று உன்னிடம் அனுப்பித்தார். உனக்குச் சொல்ல இஷ்டமிருப்பின், சொல்லு.

இந்திரா— முன்பே கூறினேன். உம்மை எனது ஆப்தநண்பராக பாவித்தாய்விட்டது என்று. இனி நீர் என்னிடம் வித்தியாஸம் பாராட்டவேண்டாம். இதுவும் உமது வீடு என்றே கொள்ளலாம். நானே ஒரு வருமற்ற அனுதை. தன்னந்தனியே இருப்பவள். அதிலும் பெண்பால். எனக்கு வேண்டுவது என்ன?

இந்திரகுமார்— வந்து நேரமாகின்றது. சீக்கிரமே உன் விருப்பத்தை அறிவிப்பாய். எனது நண்பர் என் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருப்பார். நான் செல்லவேண்டும்.

இந்திரா— ஐயா! நான் தான் சொல்லிவிட்டேனே. என் போன்ற அனுதைகளுக்கு அதிலும் பெண்பாலுக்கு வேண்டுவது என்ன? இதையே தெரிவியும். அவரிடமும் நான் உமக்குச்சொல்லியவிதம் இந்த சிறு இல்லத்தை தம்முடையதாகவே பாவிக்கலாமெனக்கூறி,

நான் தனிமையை உணராவண்ணம் செய்யுங்கள். வேறென்ன எனக்கு வேண்டுவது?

இந்திரகுமார்— சரி, நான் சென்று மற்றோர் சமயம் வந்து காண்கின்றேன், விடையளிப்பாய்.

எழுந்திருக்க,

இந்திரா— (தடுத்து) ஐயா! என்வீடு வந்ததற்கு Tea சாப்பிட்டுவிட்டுச் செல்லவேண்டும்.

கமலா என்று கூப்பிட கமலா வரவும் Tea கொண்டுவரச் செய்து இருவருமாக சாப்பிட்டு விட்டு பிரிகின்றனர்.

இந்திரகுமார்— Good Evening.

இந்திரா— Good Evening.

(இந்திரகுமார் சென்றபிறகு) ஒருக்கால் நான் நினைத்த வண்ணம் முடியுமோ? அப்படி முடியின்மிகவும் நலமே.

SCENE III.

இடம்:—

மஹேந்திரபுரியில் லேடி Mekkenna வீட்டின் Drawing Hall.

பாத்திரங்கள்:—

லேடி மேக்கன்னு தன் வேலைக்காரியுடன் பேசிக் கொண்டிருக்கின்றாள்.

காலம்:—

இரவு எட்டுமேணி சுமார்.

மேக்கன்னு— அப்புறம் Maid! வேறென்ன நடந்தது? நீ ஏதாவது information அறிந்துகொண்டனையா?

மங்களம் (என்ற Maid)—Madam, அந்தப்பிரபு ஆயிரம் ரூபாய் நோட்டைக் கொடுத்தவுடன் வேண்டாம் என்று சொல்லிவிட்டாள், சின்ன துரைசாணி அம்மா. ஐயா, ரொம்ப மனத்தாங்கலுடன் போவதை நான் கண்டேன்.

மேக்கன்னு— நீ அந்த பிரபுவுடன் ஏதாவது பேசினையா? அவர் ஏதாவது உனக்கு ஸம்திங் கொடுத்தாரா?

மங்களம்— 'Yes' அம்மணி (வெட்கத்துடன் தலைகுனிந்து கொண்டு) நான் கூட ரிபியூஸ் பண்ணினேன் மாடம். அவர் கூடவந்த பிரண்டு, வைத்துக்கொள்ளும்படி போர்ஸ் பண்ணினுருங்க. வேறுவழியில்லாமே சரி என்று வாங்கிக்கொண்டு திரும்பிவிட்டேனுங்க.

மேக்கன்னு— சரி, மங்களம் நீபோய் இந்திராவைப்பார்ப்பது உண்டா? அவள் இப்பொழுது எந்த நிலமையில் இருக்கிறுள்?

மங்களம்— சின்ன அம்மாளுக்கு என்ன? எல்லாம் உங்க மாதிரியேதான் இருக்கா. யாருடனும் அதிகமாகப் பேசுவதில்லை. Visitors அதிகமாக வருவது கிடையாது. அவங்கதான் வேலையிலேயே கண்ணுயிருக்காங்க. அதுவேதான் அவங்களுக்கு விளையாட்டு. ஆனால் அம்மாளுக்கு மட்டும், வயதாவதுங்க. சீக்கிரமே கட்டிக்கொடுக்கவேண்டும்.

மேக்கன்னு— What கட்டிக்கொடுக்கணும் மங்களம்! நீ சொல்வது எனக்குப் புரியவில்லையே.

மங்களம்— (Aside) ஐயோ! இவங்களோடு அரைகொரையா பேசுவது மிகவும் கடினம்! என்போன்றவர்களுக்கு தலையில் இவ்விதம் ஈசன் எழுதினுரே, அவரைத்தான் நான் குறைகூறவேண்டும். (பிரகாசமாய்) Madam! என்னமோ மாரிச் என்பாங்களே, அதான் செய்யணும் என்றேன்.

மேக்கன்னு— Oh! Marriage! ஆம் புரிந்தேன். ஆமாம் மங்களம்! ரொம்பநாளா உன்னிடம் ஒன்று டிஸ்கஸ் பண்ணனும் என்று யோஜனை பண்ணிக் கொண்டிருந்தேன், சமயம் வாய்த்தது. ஏன் மங்களம், உங்களுக்குசீக்கிரமே,சிறுவயதிலேயே,Early marriage ஆய்விடுகிறது? எங்கமாதிரி, வயது ஆனபிறகு தனக்

குப்பிடித்த Loversகளை கலியாணம் செய்துகொள்ள எக் கூடாது.

மங்களம்— Madam, இதெல்லாம் எனக்கு don't know. எங்க பெரியவங்க செய்துவந்த வழக்கம். அதை மாத்தப்படாது. அவ்வளவுதான்.

மெக்கன்ஞ— டாம் your வழக்கம்.

மங்களம்— என்ன துரைசாணி எங்கிட்ட விழரீங்க? நான் வேண்டுமானு போறேன்.

போகப்பார்க்கிறுள், அவளைத் தடுத்து,

மெக்கன்ஞ— மங்களம், இந்திராவுக்கு கலியாணமே! உனக்குத் தெரியுமா?

மங்களம்— எங்க சின்னம்மாவுக்கா? எனக்கு இதுவரை தெரியாதே! Madam, கொஞ்சம் Leave கொடுங்கோ, நான் போய்விட்டுவரேன்.

போகின்ருள்.

மெக்கன்ஞ— நான் நினைத்தவண்ணமே இன்னும் கொஞ்ச நாட்களில் சுரேந்திரருக்கும் இந்திராவுக்கும் Wedding நடந்துவிடும். இதுவரை அவளை கண்ணை இமை காப்பதுபோல் வளர்த்து வந்தேன். நல்ல பழக்க ஒழுக்கங்களையும், நாகரீக நடையுடைபாவனைகளையும் அடைந்திருக்கிருள். எவ்வளவோமுயன்றும் இன்னும் அவளுக்குப் பணத்தாசை மட்டும் விட்டபாடில்லை! அவ்வாஞ்சையும் அவளை விட்டகலுமாகில் அவள் போன்ற பெண்கள் ஒருவருமிரார். என்செயலாம்? என்னுலானவரை முயன்றிருக்கின்றேன். சுரேந்திரரைப்பற்றி இவ்வூரில் புகழாதாரில்லை. பிறவிச்சீமான், துறவறத்தை மேற்கொண்டு இல்லறத்தை வெறுத்திருந்தாராம். ஏதோ தந்தைவாக்குக்குக் கட்டுப்பட்டு, கலியாணம் செய்துகொள்ள இசைந்து தன் தந்தைக்கு அந்திய காலத்தில் உதவிய, இந்திராவை, மணம்புரிவதாக ஒப்புக்கொண்டிருக்கிருராம். அவளுக்கும் என்னுலானவரை advices கொடுத்திருக்கின்றேன். இனி அவர்கள் தலைவிதி போலாகின்றது.

சற்றுயோசித்து,

அவள் செவிலித்தாய் கொடுத்த கவர் இன்னும் திரவாமல் என்னிடமிருக்கிறது. அதை அவள் 35வயதாகும்வரை திரக்கக்கூடாதென்றும், அவ்வயது வந்த பிறகு ஒரு நண்பன் அவளிடம் கொடுக்கவேண்டுமென்றும் சொல்லி சத்தியமும் வாங்கி உயிர்துறந்தாள். நானும் அவள் சொன்னவிதமே இதுகாறும் வைத்திருந்தேன். இனி அதை அவள் தற்காலம் நண்பனென மதித்துவரும் இந்திரகுமாரிடம் கொடுக்கின்றேன். அவன் அவளுக்கு வரப்போகும் கணவனுகிய சுரேந்திரனுக்கும் நண்பன்.

இருவருக்கும் Wedding ஆகி சீக்கிரமே எனது பொறுப்பை நீக்கிக்கொள்ளவேண்டும். நேரமாகின்றது படுக்கச்செல்வோம்.

போகின்ருள்.

ACT 2.

SCENE I.

இடம் :—

மஹேந்திரபுரியில் சுரேந்திரரின் வீடு. Drawing Hall.

பாத்திரங்கள் :—

சுரேந்திரன் ஹார்மோனியம் வாசிக்க, இந்திரகுமாரன் மிருதங்கமடிக்க, இந்திரா பாடுகின்றனள்.

காலம் :—

காலை நேரம்.

சுரேந்திரன்— நண்பா, இன்று நமது கச்சேரி எவ்வளவு நேர்த்தியாக வாய்ந்தது கண்டனையா? இம்மாதிரி

நமதாயுள் பூராவும் நாம் கழிப்போமாயின், நம் போன்ற பாக்யசாலிகளிருப்பார்களா இவ்வுலகில்?

இந்திரகுமார்— அதுமட்டுமோ! நம்மூவரும் பழகிய வண்ணம் இவ்வுலகிலிருப்பது மிகவும் துர்லபம். இது ஏதோ, விட்டகுறை தொட்டகுறையே யன்றி வேறல்ல.

இந்திரா— நாதா, தாம் இல்லறத்தை வெறுத்திருந்த சமயம், தமக்கு இவ்வித உலகவாழ்க்கை இருக்கிறது என்பது தெரியாதே? இந்திரகுமாரா, அதான் பாவம் அப்பொழுது ஸ்திரீகளைக் காணவே கூசினர்! உனக்கும், அவ்விதகாலம் இருந்தது உண்டோ?

இந்திரகுமார்— எனக்கேனம்மணி அவ்வித காலம் வரும்? எனது நண்பரும், தமது நாதரும், ஏதோ ஸ்திரீகளைப் பற்றி தப்பெண்ணம் கொண்டிருந்தார். அவர் சொல்லும் விதமும் இருக்கின்றனர். ஆனால் அனைவரையும் அவ்விதம் சொல்லலாமா? அதான் அவர் செய்த தப்பிதம்!

சுரேந்திரன்— நண்பா, குமாரா, இவ்வூரில் நடமாடும் தொத்துநோய் தினே தினே அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. அனேக ஏழைகள் மாள்கின்றனர். தினமும் அவர்களைக் கவனிப்போரின்றியே மாள்கின்றனரெனலாம். இன்று,இதோ பக்கத்துத் தெருவுக்கு நான் செல்லப்போகின்றேன். நீயும் கூடவருகிறாயா?

இந்திரா— நாதா! என்ன இது! நீர் அவ்விடம் போகலாமா? நோய் எப்பேர்ப்பட்டதென அறியீரா? தாம் அன்னியருக்கு உதவப்போகும் சமயம் தமக்கு அவ்வியாதி தொத்திக்கொண்டால் என்செய்வது? உம்மிடம் ஒருவரையும் விடார்களே? நாங்களெல்லாம் என்ன செய்வோம்? நாதா, நீர் செல்லவேண்டாம். குழைந்தை லீலா முழித்தவுடன் நாயினை எங்கே என்றுதான் வினவுகிறாள். குழந்தையின் பொருட்டாவது செல்லாதீர். எனக்கென்னவோ துற் சொப்

பனங்கள், சென்ற சில இரவுகளாக காண்கின்றேன். அதற்கு தகுந்தாற்போல் தற்சமயம் எனது வலது நேத்திரமும் துடிக்கின்றது. நாதா தற்சமயம் என்னை விட்டுப் பிரியாதீர். அடியாள் உம்மைமிக்க வணக்கமாய் வேண்டிக்கொள்கிறேன்.

அடிபணிகின்றாள்.

சுரேந்திரன்— என்ன இந்திரா! நீயே இவ்விதம் கூற முன் வருகிறாய்? உன்னை நான் மணந்ததின் காரணம் அறியாயோ? உன் பிரதிபிரயோஜனம் எதிர்பாரா தொண்டல்லவோ என் மனத்தை உன்னிடமிழுத்தது. கண்ணே கலங்காதே. நம் உயிர் பெரிதல்ல. நாம் மற்றவருக்கு உதவுகிறோம் என நன்கறிந்து உதவுதலில் நம் பிராணன் போமாயின் அதைவிட மேலான சாவு மனிதர்களுக்குக் கிடைக்காது. எனக்கு ஒருநாளும் மரணம் சம்பவிக்காது. வீண் கவலையுறாதே. குழந்தை லீலா எழுந்தவுடன் அவளுடன் விளையாடிக் கொண்டிரு. குமாரா! இன்று நீ வீட்டிற்கு போக வேண்டாம். நான் திரும்பிவரும் வரை இவ்விடமே இவர்களுடன் பேசிக்கொண்டிரு. நான் சென்று வருகின்றேன்.

கொஞ்சதூரம் சென்று திரும்பிவந்து,

கண்ணே அப்படி, ஒருக்கால், நான் அவ்வியாதியால் பீடிக்கப்பட்டு இறப்பின்—

இந்திரா— நாதா! என்ன வார்த்தை சொல்லுகின்றீர்? இறக்கவோ நீர் செல்லப் போகின்றீர்? அதற்கு என்னிடம் விடையோ? நாதா! நாதா! இதெல்லாம் என்ன விளையாட்டு? என்னை, அன்னியரிடம் காட்டிக்கொடுத்து செல்ல உத்தேசமோ? நாதா உம்மை விட்டுப் பிரிய என் மனம் இடம் கொடுக்கவில்லையே!

கண்ணீர்வடிக்கின்றாள்.

சுரேந்திரன்— கண்ணே! எனக்கு நீ தேறுதல் சொல்ல வேண்டியிருக்க இவ்விதம் செய்தல் அழகா! இந்தக்

கோலம் வேண்டாம். மனத்தைத் தேற்றிக்கொள். நான் சொல்வதையும் கேள்.

இந்திரா— நாதா, நான் கேளேன் என் செவிகளால்.

சுரேந்திரன்— நண்பா, நீயாவது கேட்டுக்கொள்.

இந்திரகுமார்— சரி, எனக்குப்பிடித்ததா சனி. நண்பா, நீ ஏன் உன்மனைவி விருப்பத்திற்கு விரோதமாக தற்சமயம் செல்லவேண்டும். மற்றோர் சமயம் பார்த்துக் கொள்ளலாமே. பெண்டிர் மையிட்ட கண்களினின்றும் கண்ணீர்வரப் பார்க்கலாமா? இது நம்போன்ற படித்தவர்களுக்கழகா?

சுரேந்திரன்— நேரமாகின்றது கேள். நான் இறக்க நேரிடின், திரும்பவும் என் சவத்தை வீட்டுக்கு கொண்டு வராமல் எனது மூதாதைகளின் (Grave yard) சவக்குழியில் அடக்கம் செய்து விடச் சொல். நீங்களொருவரும் வரவேண்டாம். இதுவே எனது விருப்பமெனவும் அறிவி. கடவுளின் கிருபையால் அவ்விதம் ஒன்றும் நடவாது. நீ தான், நான் போகநேரிடின், இந்திராவுக்கு தேறுதல் சொல்லவேண்டியிருக்கும்.

இந்திரகுமார்— நண்பா சுரேந்திரா! இதுவோ என்னிடம் கூறுவது? நீ செல்ல வேண்டாம் இப்பொழுது.

சுரேந்திரன்—கேளேன் ஒருவர் வார்த்தையும் இப்பொழுது. நேரமாகின்றது. போய்வருகின்றேன்.

செல்கின்றனன்.

இந்திரகுமார்— நண்பா!

அவனைப்பார்த்தவண்ணம் நிற்கின்றான்.

இந்திரா— நாதா! நாதா!

அவனைப்பின்பற்ற முயல்கின்றாள்.

[குழந்தை லீலா எழுந்து 'நாயினா' 'நாயினா' என்று கூவிக்கொண்டும் பின்னால் கமலாவுடனும் வருகின்றது. சுரேந்திரன் அந்த ரூமை விட்டுப் போகும்பொழுது அனைவரையும் திரும்பிப்பார்த்து விட்டு 'ஈசன் ரக்ஷிப்பாராக' என்று கூவிவிட்டுச் செல்கின்றான்.]

SCENE II.

இடம் :—தெரு.

பாத்திரங்கள் :—

அக்ஷயகுமாரனும் மோஹனதாஸும் பேசிக்கொண்டு வருகின்றனர்.

நேரம் :—சாயங்கால நேரம்.

அக்ஷயகுமாரன் :—நண்பா! மோஹன்! இருந்தாலும் ஈசுவரன் இடம் பார்த்துத் தான் சோதிக்கின்றார். 'வெண்ணை திரண்டுவரும்சமயம் தாழி உடைந்ததாம்' என்றமாதிரி.

மோஹனதாஸ் :—பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது! எப்பேர்ப்பட்ட சீமானின் புத்ரன்! அறுதிப்பிணம் மாதிரி ஒருவரும் செத்த மனிதனிடம் வரவில்லை. துக்கமென்பது மனிதர்களுக்கு கிடையாதா? உறவினர் ஒருவருமில்லையா? என்னடா கல்மனசு! ஐயோ! உயிருடனிருந்த காலை அவனை அண்டிப் பிழைத்தோர் எல்லாம் இப்பொழுது எங்கே? நண்பா, பரிதாபம்! பரிதாபம்!! மிக்கபரிதாபம்!!!

அக்ஷயகுமாரன் :—ஏண்டா? அவன் பெண்சாதிகூட வரக்கூடாதா? அவளும் எங்கேயடா சென்றனள்? குழந்தை கூட ஒன்று உண்டல்லவா அவளுக்கு?

மோஹனதாஸ் :—ஐயோ! அதைக்கிளப்பாதே. அந்த அம்மாள் படிச்சவள், ராங்கிக்காரி. அவளுக்கு அந்த இந்திரகுமாரனுடன் பேசத்தான் நேரமிருக்கும்.

இச்சமயம் ஓர் பாதரி முன் செல்ல Coffin மட்டும் பின் கொண்டுபோகப்படுகிறது. அதன் பின் இருவழிப்போக்கிகள் பேசிக்கொண்டு போகின்றனர்.

முதல் வழிப்போக்கன் :—அடேதம்பி கைலாஸம்! அம்மா அப்புறம் என்னடா சொன்னாங்க?

நான் போனேனு! அந்த ஐயா அங்க இருந்தா, சின்னபொண்ணு வாசல்ல வந்துச்சு. அம்மா கூப்பிட்டுச்சு. அம்மா வந்து 'யாரடா அது' இன்னுங்க. ரவே பொவயலே இருந்தா தாயேன்.

புகையிலே கொடுக்க வாயில் அடக்கிக்கொண்டு

ஏயப்பா ரொம்ப காரமா இருக்குது அண்ணே? இது என்ன சேபுரியா?

முதல் வழிப்போக்கன் :—தம்பி, அது அப்புறம் சொல்ரேன், அந்த அம்மா என்ன சொன்னுங்க சொல்லு.

கைலாஸம் :—நான் தானம்மே சாமியாரு, அனுப்பித்தாரு இன்னே. என்னடா விசேஷம் என்னுங்க. ஏயப்பா காரம் கிருகிருங்கிரதுங்கிரே. சுண்ணும்பு கொஞ்சம் போட்டுக்கிறேன்.

சுண்ணும்பு கொஞ்சம் உருட்டிப் போட்டுக்கொண்ட பிறகு

அண்ணே! இப்போதான் சரியா இருக்கிது.

அக்ஷயகுமாரன் :—அடே மோஹன். இவர்கள் தான் இப்பிணத்துடன் செல்லுபவர்கள் போல் தோன்றுகிறது. இந்த சுரேந்திரன் வாழ்ந்ததையும் இப்பொழுது செல்வதையும் பார்த்தால் நாம் எக்கதியாவோமோ என எனக்குப் பயமாக இருக்கிறது. நாமேன் இவ்வுலகில் மனிதர்களாகப் பிறந்தோம்.

மோஹனதாஸ் :—பெரிய வேதாந்திபோல் பேசாதே. என் மனம் சோர்வடைகின்றது. வேறு ஏதாவது பேசுவோம்.

அக்ஷயகுமாரன் :—நண்பா! இதோ இவர்கள் பேச்சை கவனிப்போம். வெகு விசித்ரமாகப் பேசுவார்கள்.

அவர்கள் பேசுவதை கவனிக்கின்றனர்.

கைலாஸம் :—என்னெ ஸாமியார் அனுப்பிச்சாங்க, தொரை கிடக்காரு இன்னேன். உடனே அம்மாவும் இன்னொரு

துரைமாதிரி ஒரு ஐயா இல்லே, எப்பொவும் அவங்களே சுத்திட்டு, அந்த ரெண்டு பேருமா ரோசனே பண்ணிக்கிட்டு அப்படியே அய்யாவை தூக்கிகிட்டு வீட்டு சவக்குழிலே அடக்கம் செய்யச் சொன்னுங்க!

முதல் வழிப்போக்கன் :—(ஈசன்) ஏண்டா தம்பி! ஏண்டா அப்படிச் சொன்னுங்க?

கைலாஸம் :—அது என்னமோ! எனக்கென்ன தெரியும்? அப்புறம், போ அண்ணே

தலையைச் சொரிந்து

மத்திலே பேசி ரோசனையைக் கெடுத்துட்டே. ஞாபகம் பண்ணிக்கிறேன்.

ஒரு பாக்கு போட்டு மென்று கொண்டு

ஆ! ஆ!! வருது வருது. வந்துவிட்டது. இரு இரு அண்ணே

மயங்கிவிழுகிருன்.

ஈசன் :—இதென்னடாது. தம்பி! தம்பி!! ஏண்டா விழுந்துட்டே. ஐயோ! இவனேயும் தூக்கிச் செல்ல வேண்டுமோ?

முதுகில் சாய்த்துக்கொண்டு கொஞ்ச தூரம் செல்ல

கைலாசம் :—அண்ணே மெல்ல மெல்ல.

ஈசன் :—(அவனே விட்டு விட்டு) தம்பி! இதென்னடா விளேயாட்டு?

கைலாசம்:—இல்லே. இந்ததுரையைப்பற்றி நினவுவந்துச்சு. அந்த ஐயா குணத்தையும் பெருமனசையும் நினேச்சுக்கிட்டேன். துக்கம்வந்து உளுந்தூட்டேன். வேறொண்ணுமில்லே.

ஈசன் :—இல்லே தம்பி! நீ செத்துப்பூட்டயோன்னு நினேச்சேன்.

கைலாஸம் :—ஆ ! (அவனை அடித்து) நானு செத்துப்பூட்டேன் ? ஆ ! நானல்ல அந்த அய்யாவின் சாமானெல்லாம் எடுத்துக்கணும்.

ஈசன் :—அதென்னடாது ?

கைலாஸம் :—அது ஒரு ரவசியம் நான் சொல்லமாட்டேன். வா நாம் போவாம் வா.

இழுத்துக்கொண்டு போகின்றான்

அக்ஷயகுமாரன் :—நண்பா ! கேட்டுக்கொண்டனையா ? அனுதைபோல் சுரேந்திரர் அடக்கம் செய்யப்படப் போகின்றான். ஆகையால் நண்பா !

உலகமோ அழியும் உடலேமோ அழியும்......................
ஆகையால் வநிதைமேல் ஆசையை ஒழித்து,
சாகாதிருக்க ஜகத்தினீங்குவாரே.

மோஹனதாஸ் :—இன்னும் என்னென்ன வேடிக்கைகள் நடக்கின்றதோ பார்ப்போம். எனக்கென்னவோ அப் பெண்மணி சுரேந்திரனை மனப்பூர்வமாய் நேசித்திருப்பாளெனத் தோன்றவில்லை.

அக்ஷயகுமாரன் :—இது தெரியாதா உனக்கு ? ஊரில்தான் முன்பே பிரளியாயிற்றே. எல்லாமவரவர்கள் தலைவிதி. புருஷர்களை நயவஞ்சகமாகவே ஏமாற்றுவார்கள் ஸ்திரீகள். நமக்கு நேரமாகின்றது வா போவோம்.

இருவரும் போகின்றனர்.

SCENE III.

இடம் :—சவக்குழி (Grave yard).

பாத்திரம் :—பெட்டியில் வைக்கப்படிருக்கும் சுரேந்திரர் மெல்ல கண்விழிக்கின்றார்.

காலம் :—காலை.

சுரேந்திரன் :—(மெல்லியகுரலில்) ஹா ! நான் எங்கு இருக்கின்றேன் ! இதன்ன இருட்டாக இருக்கின்றது

கயிறுகளால் கட்டப்படிருக்கின்றேன் ! தூக்கத்தில் சொப்பனமோ ?

நன்கு உணர்ந்து

இல்லை இல்லை வாஸ்தவமே. இதோ என்னைக் கட்டியிருப்பது கயிறுகள்.

மெல்ல கயிறுகளை அறுத்து விடுவித்துக்கொண்டு பெட்டியிலிருந்து வெளிக்கிளம்பி

இங்கு எப்படி வந்தேன் ? என்னை ஏன் இவிதம் செய்திருக்கின்றனர் ? மிகவும் இருட்டாகவன்றோ இவிடம் இருக்கின்றது ? இது ஓர் இருட்டறையா ? இது என் வீடல்லவே.

நெருப்புப்பொட்டி ஒன்று தன் டிரௌஸரிலிருந்துஎடுத்து குச்சி ஏத்தி அங்கோர் மூலையிலிருக்கும் மெழுகுவர்த்தியை ஏர்த்தி சுற்றிப் பார்க்கின்றான்.

ஆஹா ! இது எங்கள் குடும்பச்சவக்குழியல்லவா ? இதோ என் தந்தையின் சவப்பெட்டி ! இங்கு எப்படி நான் வரலானேன் ? நான் இறந்து போனேனு ? அல்லது இறந்தேனென எண்ணி என்னை அடக்கம் செய்துவிட்டார்களா ? ஐயோ பாவம் ! என்னையே நம்பி என்னிடம் அளவிலா விசுவாஸம் கொண்டிருந்த என் மனைவி இந்திரா என்ன மனவருத்தங்கொண்டிருப்பாள் ? ஐயோ, அவளை விட்டு நான் பிரியும் பொழுதே என்ன அழுகை அழுதாள். குழந்தை லீலா என்னைக் காணுமல் அழுகையை ஓயாளே! எனது நண்பனும் மிக்க துயருவானே. ஈசா ! நல்வேளையாய் அவர்கள் எண்ணியவிதமில்லாமல் உயிருடனிருக்கின்றேன். இன்னும் கொஞ்சநேரத்தில் அவர்களிருப்பிடம், எனது மாளிகையடைந்து நான் அவர்களுடன் கலக்கும்பொழுது அவர்களின் சந்தோஷத்திற்கு அளவேயிராது.

இங்கு எவ்வாறு கொண்டுவரப்பட்டிருக்கலாம்? சற்று யோசித்து

இப்பொழுது ஞாபகம் வருகின்றது. அந்தப்பிள்ளைக் கண்ட பையனுக்கு உதவுங்கால் திடீரென மயக்கங் கண்டு நான் விழுந்தேன். அதுதான் ஞாபகமிருக்கின்றது. அப்புறம் ஒன்றும் தெரியாது. சற்றுமுன் பெட்டியில் கட்டப்பட்டிருந்தபொழுது கண்விழித்தேனே, அப்பொழுதுதான் சொந்த ஞாபகம் வந்தது. இது Sunstrokeனால் ஏற்பட்டிருக்குமென நம்புகிறேன். நான் இறந்தேனென எண்ணியே என்னை அடக்கம்செய்திருக்கின்றனர்.

இனி யோசித்துக் கொண்டிருப்பானேன்? வெளியே செல்லும் மார்க்கம் தேடவேண்டும். நான் வீட்டை விட்டு வெளிக்கிளம்பும்பொழுது இருந்த டிரெஸ் முதலியவைகளெல்லாம் கழட்டிவிட்டனர். என்னை இந்த ஷாஸ்டிரௌஸருடனும் சட்டையுடனுமே விட்டிருக்கின்றனர். நல்வேளையாய் இந்த டிரௌஸரில் இத்தீப்பெட்டி மட்டும் இருந்தது. இது அவர்களுக்கு அகப்படவில்லை போலும். இவ்வாறே நான் வீடுசெல்வதா? முதலில் வெளியேறும் மார்க்கம் தேடுவோம்.

சற்று தூரம் காண்டில் எடுத்துக்கொண்டு செல்கின்றான். வெளிவரும் சமயம்

இதென்ன? சிறு சிறு பெட்டிகள்! பைகள்! இதென்ன குவியல்கள்! சிறு Treasure Room போல் தோன்றுகிறதே! இவைகளெல்லாம் யாருடையது? இங்கு வருவானேன்?

பெட்டியைத் திறந்துபார்த்து

என்ன! (திடுக்கிட்டு) அவ்வளவும் Currency notes?

மற்றொன்றைத் திறந்து

எல்லாம் நகைகள்! அளவிலா ஆஸ்திகளைக் காண்கின்றேனே! இவைகளைப் பெறவே நான் இறந்தேனோ?

Oh. God! நான் என் செயலாம்? இப்பொழுது இவைகளை எடுத்துக்கொண்டு வெளியேறுவதா?

யோசனையில் ஆழ்ந்து

இவைகள் எங்கும் செல்லாது. எனக்கு இருக்கும் ஆஸ்திகளுக்கோர் அளவில்லை. இவைகள் வேண்டாம். ஆனால் தற்சமயம் என்னிடம் ஒன்றுமில்லாமலிருக்கின்றேன். ஏதோ சிலவுக்காக கொஞ்சம் நோட்டுகள் கைவசம் வைத்துக்கொள்கிறேன். வேண்டும்பொழுது இங்குவந்து எடுத்துக்கொள்ளலாம். இதை சரியாகவைத்துச் செல்வோம். என் பெண்சாதி குழந்தைகளுடன் கூடி சுகமாக வாழும்பொழுது புதிதாக கண்டெடுத்த புதயலை அவர்களுக்கு காண்பிப்பேனாயின் அவர்களும் அளவிலா ஆனந்தம் கொள்வார்கள். இதுவே சரியான யோசனை.

சரியாக மூடிவைத்துவிட்டு

இனி எனக்கொன்றும் குறைவில்லை. யோசிப்பின் இதுஏதோ திருடர் கூட்டத்தாரின் சந்திப்பு இடமாக இருக்கவேண்டும். அவர்கள் தாங்கள் கொள்ளை கொண்டுவரும் பொருள்களை இங்குதான் சேகரித்து வைக்கின்றார்கள் போலும். சவக்குழி நன்றாகப் பூட்டப்பட்டு ஒரு சாவி எங்கள் வீட்டிலும் மற்றொன்று பாதிரியிடமும் தான் இருக்கும். எப்படிவெளியேறலாமென்று யோசித்திருந்த் எனக்கு கதவை உடைக்காமலும் அளவற்ற ஆஸ்தியைப்பெறவும் கர்த்தன் அருளினாரே. திருடர்கள் ஓர் திருட்டுப்பாதை வைத்திருப்பார்கள். அதைக் கண்டுபிடித்தே வெளியேறுவோம்.

ஒற்றையடிப் பாதையைக்கண்டுபிடித்து வெளியே வந்து அவர்கள் வைத்திருந்த மாதிரியே வெளிவழியை கற்களாலும் முட்களாலும் அடைத்துவிட்டு லைட்டை அணைத்து விட்டு வெளிவரவும், நல்லகாற்று உட்கொண்டு

இப்பொழுதுதான் சூரிய வெளிச்சத்தையும் நல்ல காற்றையும் உட்கொள்கிறேன். எவ்வளவோகாலம் வெளிச்சத்தைக் காணாதவன் மாதிரி தோன்றுகிறது. இப்பொழுது கடற்கரைக்கன்றோ வந்திருக்கின்றேன். ஒருவரும் என் கண்ணில் விழவில்லையே? அறிந்தேன். திருடர்கள் கூட்டமுள்ள இடத்தை சந்திப்பிடமாக வைத்துக்கொள்வார்களா? நம் வீடு இங்கிருந்து சுமார் மூன்று மைல்களிருக்கின்றன. நாம் நேராக வீடு செல்வோமா? ஹா இப்பொழுதன்றோ ஒவ்வொன்றாக ஞாபகம் வருகின்றது.

உலாவிக்கொண்டு

அப்பையனின் பிளவை உடைந்ததும்! இரத்தவெள்ளம் பெருகியதும்! நான் மயக்கங்கண்டு விழுந்ததும்! என்னை அங்கிருந்தோர் ஓர் பலகையில் வீழ்த்தியதும்! ஈசா! அப்பையன் என்னவாயினனோ? என் வீட்டிலிருந்து யார் வந்தனரோ? இனி தாமதம் செய்யலாகாது. எனக்கு என் பெண்சாதி பிள்ளைகளைப் பார்க்க வேண்டுமென்ற அவா மேலிடுகின்றது. எனக்காக துக்கம் மிகுந்து கதறிக்கொண்டிருக்கும் இந்திராவைத் திடீரெனப்பார்த்து கட்டியணைத்து கண்ணே கலங்காதே நான் இறக்கவில்லை உயிருடன்தான் இருக்கின்றேன் எனக் கூறி முத்தமிடவேண்டுமெனத் தோன்றுகிறது. எனக்கு பறவைகளைப்போல் ரக்கைகள் கொடுத்திருப்பின் இப்பொழுதே செல்வேன். ஈசன் அப்படிக் கொடுக்கவில்லையே!

இவ்வுடையுடன். அவளைக் காணச் செல்வது உசிதமல்ல. இங்குதான் அருகில் மாலுமியின் கடை (Sailor shop) இருக்கின்றது. அவனிடம் சென்று நான் கப்பலில் திண்டாடிக் கரையேறிய ஓர் மாலுமி என்றும் எனக்கு டிரெஸ்கள் தேவையெனவும் கூறி விலை கொடுத்து அதை வாங்கிப் போட்டுக்கொண்டு என் பிரிய நாயகியை, காதலியைக் காணச் செல்கின்றேன்.

போகின்றான்.

ACT III.

SCENE I.

மஹேந்திரபுரியில் சுரேந்திரர் வீட்டில் ஓர் அறை.

பாத்திரங்கள் :—மங்களம் என்னும் தாதி பின்வரும் வண்ணம் யோசித்து ஆகாரத்தை தயார்செய்து வைத்துக்கொண்டு குழந்தை லீலாவின் வரவை எதிர்பார்த்து இருக்கின்றாள்.

காலம் :—இரவு.

மங்களம் :—சமீபகாலமாக குழந்தைக்கு பிடிவாத குணம் மேலிட்டிருக்கின்றது. தாயும் குழந்தையை சரியாக கவனியாமல் கணவன் இறந்த துக்கசாகரத்தில் மூழ்கியிருக்கின்றாள். பணக்காரர் வீட்டுக்குழந்தை, அதிலும் தந்தையைப் பரிகொடுத்திருக்கின்றது. ஏதாவது கண்டிப்போமாயின் அழ ஆரம்பிக்கின்றது. சமாதானப்படுத்தவோ மிகவும் கஷ்டமாயிருக்கின்றது. என் வாழ்வை என்னென்று சொல்வேன்?

துரைசாணி அம்மாளிடமிருந்து வந்தகாலையிலேயே இந்திராவம்மாவுக்கும் எனக்கும் அதிக ஸ்நேகம். அதினாலன்றோ அவளுக்கு கலியாணமானமுதல் அவளை விட்டுப்பிரியாமல் அவளுடனேயே இருந்து வருகின்றேன். குழந்தைப்பிரஸவத்தில் அவளதிக சிரமப்பட்டாள். இக்குழந்தையும் பிழைக்குமா என எண்ணியிருந்தோம். ஏதோ தெய்வவசாத் பிழைத்து உருவாகி உலாவிவருகின்றது. இக்குழந்தையின் சிறிப்பையும் விளையாட்டுக்களையும் பிடிவாதகுணத்தையும் கண்டு களியாமல் போய்விட்டானே பாவி. அக்குழந்தை எதிலும் பிடிவாதம். ஆகாரம் ஊட்ட வேண்டுமாயின் கதை சொல்லியே தீரவேண்டும். இப்போது சாப்பிடும்நேரம். அவளை அழைத்துவர கமலம் சென்றிருக்கிறாள். வந்ததும் சாதம் ஊட்டிப் படுக்க

வைக்கவேண்டும். குழந்தை தாயைப் பாராமல் ஏங்கியுமிருக்கின்றது. அதை நயவசனங்களாலேயே தேற்றவேண்டும்.

குழந்தை வர

கண்ணே! லீலாமணி! வா அம்மா. சாதமெல்லாம் ஆறிப்போறதே. சாப்பிடவேண்டாமா?

லீலா:—மங்காத்தா! இன்னிக்கு எங்கம்மாவண்டை போனேன். நோக்குத் தெரியுமா?

மங்களம்:-என்னம்மா!(தாடையைவழித்து விரல்சொடுக்கி) குழந்தைக்கு எவ்வளவு திருஷ்டி! இந்திராவம்மா கிட்டையா போனே?

லீலா:—ஆமம்மா! கமலம்மாவை வேணுமானல் கேட்டுப் பாரு.

மங்களம்:—ஏண்டி கமலம்! குழந்தை எப்போடிபோனா அவம்மாகிட்ட? ஏண்டி எனக்குசொல்லக்கூடாதா? லீலாமணி,என்னையும் கூட்டிக்கொண்டு போகக்கூடாதா?

லீலா:-பந்துவிளையாடினேன்னோ? பந்து அப்படிப்போச்சு. நான் ஓடினேன். அம்மா பாத்துக்கொண்டிருந்தா. கண்ணே லீலான்னு! ஓடியேபோனே. தலைகுனிஞ்சுண்டு நின்னே. அம்மா கிட்ட இழுத்துண்டு கட்டிண்டா. அப்புறம் அப்புறம் (விம்மி விம்மி) இப்படி அழுதா.

மங்களம்:—கண்ணே! அம்மா அழுதா அழாதே என்று சொல்லக்கூடாதா?

லீலா:—நான் சொல்லாமே இருப்பேனா? ஏனம்மா அழுறே நாளைக்கு நாயினவந்தா சொல்லித்தறுவேன்னேன். ஹோ என்று அழ ஆரம்பிச்சுட்டா. எனக்குங்கூட அழுகை வந்துவிட்டது.

மங்களம்:—கண்ணே அழாதே இப்போ நீ சாப்பிடவேண்டாமா, இப்போ நான் ஊட்டட்டுமா, நீயா சாப்பிடுறயா?

லீலா:—இரம்மா! அப்புறம் அம்மாவந்து குழந்தே, நாயினு செத்துப்பூட்டாறு இன்னு. நான் இல்லவே இல்லே நீ பொய்சொல்றே இன்னேன். நான் சொன்னது சரிதானே மங்கா?

மங்களம்:—ஈசா! (aside) மெள்ள பேச்சை திருப்ப வேண்டும். கண்ணே! இன்னிக்கு ஒருகதை சொல்லப்போறேன் நீ சாப்பிட ஆரம்பி நான் சொல்றேன்.

லீலா:—உம் உம்.

தட்டில் சாதம் போட.

ஆரம்பி சீக்கிரம் நல்லகதையா இருக்கனும்.

சாப்பிட ஆறம்பிக்கிருள்

ஊம்.

மங்களம்:—ஒரே ஒருராஜாவாம்

ஒருபிடி சாப்பிட்டுவிட்டு.

லீலா:—ஊம். அப்புறம் (அவளை பார்த்தவண்ண மிருக்க)

மங்களம்:—சாப்பிடு சொல்கிறேன். அவனுக்கு ஒரு பெண்டாட்டி.

லீலா:—மங்கா, ராஜாவுக்கு அம்பட்டு பெண்டாட்டியிருப்பாளே!

மங்களம்:—பேசாமே கதையைக் கேட்டுண்டு சாப்பிடணும். அப்பொத்தான் சொல்வேன்.

லீலா:—ஊம். (ஒருபிடி சாப்பிடுகிருள்)

மங்களம்:—அவாளுக்கு ஒரு பொண்ணும்.

லீலா:—உம்.

மங்களம்:—ராஜா காட்டுக்கு சாமியைப் பார்த்து வரம் வாங்கிவர தபசுக்கு போனர்.

லீலா:—எங்க நாயினு மாதிரியா?

மங்களம் :—இல்லை கண்ணே! அந்த ராசா திரும்பிவந்தாரே. உங்க நாயினா திரும்பி வாறார் கண்ணே.

லீலா:—நீ பொய்செல்றே. நான் செல்றேன்பாரு. நிச்சயம் திரும்பி வருவாரு. வரச்சே எனக்கு அத்தனை நகை கொண்டுவருவாரு. அப்பொ உனக்கு நான் குசுத்தான் கொடுப்பேன்.

மங்களம் :—கண்ணே! நீ ஒன்றும் கொடுக்கவேண்டாம். இப்போ சாப்பிடு.

லீலா :—ஊம் கதை.

மங்களம் :—ராஜா பதினஞ்சு வருஷம் கழித்து திரும்பி வந்தாரு.

லீலா :—அப்புறம்.

மங்களம் :—பொண்ணு பெரிசாஇருந்தது. அதுயாருன்னு கேட்டாரு.

லீலா :—என் மங்கத்தா? நாளக்கி அப்பா திரும்பி வர போது நானுந்தானே பெரியவளா இருப்பேன். அந்த ராஜா கேட்டமாதிரிதானே எங்க நாயினா யாருன்னு கேட்பாரோ?

மங்களம் :—கண்ணே நான் கதை சொல்லட்டுமா வேண்டாமா? நீ இப்படி சாப்பிடாமே தொந்திரவு பண்ணினா நிருத்திவிடுவேன்!

லீலா :—இல்லை இல்லை சொல்லு?

மங்களம் :—அப்புரம் ராஜா ராணியைப்பார்த்து ஏன் கலியாணம் பண்ணிவைக்கவில்லை என்று கோவிச்சுண்டு கேட்டார். நாளை காலை நான் யாரை முதல்லே பார்க்கிறேனோ அவனுக்கு இந்தப்பெண்ணை கலியாணம் செய்து கொடுக்கப்போறேன் என்றார்.

லீலா :—நான் அப்படிக்கலியாணம் செய்துகொள்ளமாட்டேன். போ.

அழ ஆரம்பிக்கிறாள்.

மங்களம் :—உன்னை ஒருவரும் சொல்லவில்லை. இது கதை நீ அழாதே! சாப்பிடமாட்டேன் என்கிறே அசடாப் பூட்டே நான் போறேன் போ.

எழுந்துதிருக்க அவளைப்பிடித்து இழுத்து உட்காரவைத்து.

லீலா :—ஊம் அப்புறம் என்ன பண்ணினார்?

மங்களம் :—மறுநாள் காலமே ஒரு சின்ன பிராம்மணப் பையன் குச்சி பொருக்கிக்கொண்டிருந்தான். ராஜா அவனைக் கூப்பிட்டு கலியாணம் பண்ணிவைத்தார்.

லீலா :—அப்புறம்.

மங்களம் :—சாப்பிடு சொல்கிறேன்.

லீலா ஒருவாய் சாப்பிடவும்.

அப்புறம் ஒரு பெரிய அரமனை கட்டிக் கொடுத்தார். அதிலே ராஜா பெண்ணு அந்த சின்ன பிள்ளை எல்லாரும் வசித்துகொண்டிருந்தார்கள். அந்த பையன் பள்ளிக்கூடத்திற்குப்போய் படித்துக்கொண்டிருந்தான்.

லீலா :—நான் போறேனே அதுமாதிரி பள்ளிக்கூடமா!

மங்களம் :—ஆமாம். அவன் ஸ்நேகிதரெல்லாம் அந்த ராஜாத்தி மாதிரி அவனோடு இருக்காளே அது யாரு என்று அந்தப்பையனைக் கேட்டார்கள். அவனுக்கு சொல்லத் தெரியல்லை. நாளைக்கு கேட்டுவந்து சொல்றேன் என்றான்.

லீலா :—அப்புறம். யாரைக்கேட்டான்? அசடே எங்கிட்ட வரப்படாதோ? நான் சொல்லுவேனே பொண்டாட்டி என்று.

மங்களம் :—நீ சாப்பிடு நான் சொல்றேன்.

லீலா சாப்பிடவும்.

ராஜாபெண்ணைக் கேட்டான். நாளைக்காகட்டும், நாளைக் காகட்டும் என்று சொல்லிவந்தா.

கண்ணே ! லீலா, லீலா.

லீலா தூங்கிவிட்டதைக்கண்டு.

இன்று நம் கதையை இத்துடன் முடித்துக்கொள்ள லாம். குழந்தையும் சாப்பிட்டுவிட்டது தூங்கியும் விட்டது. நம் வேலையும் முடிந்தது.

வாயையும் கையையும் துடைத்து விட்டு தூக்கிச்செல்கிருள்.

SCENE II.

இடம் :—மஹேந்திரபுரியில் கடற்கரைக்கருகிலுள்ள Sailor shop.

பாத்திரம் :—Sailor shop எஜமானனுகிய ருத்ரவீரன் நாற் காலியில் உட்கார்ந்திருக்கின்ருன். ஷாப் சாமான்கள் பிரோவில் வைக்கப்பட்டிருக்கிறது. பெரும் நிலக்கண் ணுடி ஒன்றும் இருக்கின்றது.

காலம் :—பனிரண்டுமணி சுமார்.

ருத்ரவீரன் :—*காலத்தின் கொடுமையை என்னென்று சொல்வேன்! ஈசன் ஏன் தான் இவ்வுலகில் பெண்களைப் படைத்தாரோ ?*

ஆஹா என்னசிறிப்பு ! என்னகுதூகலம் ! (எழுந்து) எல்லாம் வஞ்சகம். நாடகமன்ரோ நடித்தனள். அவளை நம்பி ஹா ! ஏமாந்தேன் (பல்லைக்கடிக்கின்ருன்) ஹா! அந் நீலி என்னை முழு மூடனுக்கினது மன்னியில் என் னென்ன விசித்ர காரியங்கள் செய்திருக்கின்ருள். ஒன்ரு ? இரண்டா ? கணக்கிலடங்காதது. அது ஒன்றினல் மட்டுமா ? எனக்கு ஸ்திரீகளினிடம் அளவிலாக் கோபம் பிறந்திருக்கின்றது? ஐயோ ! அதை நினைக்கவும் மனம் பதறிசென்கிறதே. ஈசா ! இவ்விதமேன் உண்டாக்கினை. ஹா ! சுரேந்திரா ? நீயுமா நீலியினிடம் வசப்பட்டனை ? எப்படியோ தப்பித்துக்கொண்டனளே. அவளைக் காண்பேனுகில் டார் டாராக கிழித்தெருந்திருப்பேனே! அவளை முற்றும் நான் நம்பியிருக்க அன்னியனை நேசித்தது மன்னியில் என்னைக் கொலைசெய்யவும் வழி வைத்த னளே. ஈசனருளால் எவ்விதமோ தப்பினேன். தப்பி என்ன பிரயோஜனம்? அவளை நான் சித்ரவதை நேரில் செய்திருந்தாலன்ரோ என்மனம் சற்று ஆறுதலடைந் திருக்கும். அவள் தான் தப்பித்துவிட்டனளே. அதை ப்பற்றி யோசித்து என்னபயன்.

நான் என்னதான் என் எண்ணத்தை மாற்ற முயன் றும் முடியவில்லையே. இந்த ஷாப் வைத்து அநேக மாலுமிகளிடமிருந்து உடையை வாங்கி அநேகருக்கு வியாபாரமும் செய்துவருகின்றேன். என்னிடம் வரு பவர் சிலரே. அவர்களுக்கு நேரமிருப்பின் அவர்கள் கதைகளையும் கேட்கின்றேன். எல்லாம் நம்முடையது போலவே ஸ்திரீகளால் ஏமாற்றப்பட்டதும் கொலைக் கஞ்சி ஓடிவந்ததாகவுமே இருக்கின்றது. இன்று காலை முதல் ஒருவரையும் காணேன்.

நாற்காலியில் சாயவும் ஒருவன் வருகிருன். அவனை வரவேற்று.

ஐயா ! வரவேண்டும் தாங்கள் எந்த ஊர், தமக்கு வேண்டுவது என்ன ?

மனிதன் (சுரேந்திரன்) :—*பெரியவரே. நான் இவ்வூர் வாசி தான்.*

ருத்ரவீரன் :—*இவ்வூரா ? நான் பார்த்ததாக ஞாபக மில்லையே ? ஒருக்கால் சமுத்ரத்தில் வரும் சமயம் கப்பல் உடைந்து தத்தளித்து கரையேறினீர்களோ ? ரொம்ப சிரமப்பட்டு மூச்சுத்திணரியவரைப் போல் முகம் வெளுத்திருக்கின்றதே!*

188,769

மனிதன் :—ஆம்; நான் இந்தூர் வாசியே. அமராபுரிக்கு வர்த்தக நிமித்தம் சென்றிருந்தேன். திரும்பி வருங்கால் புயற்காற்று அடிக்க நான் வந்தமரக்கலம் கவிழ்ந்தது. திண்டாடி திகைத்து நிற்கும்சமயம் ஓர் கட்டை மிதந்துவர அதன் உதவியால் தத்தளித்து கரைசேர்ந்தேன். வெகுநேரம் மூர்ச்சையற்று இருந்தேன். காலை தான் அங்கிருந்து எழுந்து வந்திருக்கின்றேன். வீட்டிற்குச்சென்று எனது பெண்ஜாதி பிள்ளைகளைப் பார்வையிடுமுன் இங்கு Shop இருப்பதாக அறிந்து இங்குவந்து உடை மாற்றிச் செல்லவே வந்தேன். உடைகளிருப்பின் கொடுத்து உதவும்.

ருத்ரவீரன் :—உம்முடைய பெண்சாதியை விட்டுப் பிரிந்து எவ்வளவு நாட்களாயது? அவள் உம்மை மனப்பூர்வமாய் நேசிப்பவளா அல்லது வஞ்சக சித்தமுள்ளவளா?

மனிதன் :—என்ன பெரியவரே? ஸ்திரீகளும் வஞ்சக நெஞ்ச முடையவர்களாக இருப்பார்களா? எனது பெண்சாதி மிகவும் நல்லவள், அழகு வாய்ந்தவள், இனிமையாகப்பேசும் இயல்புள்ளவள். என்னிடம் அதிகப்பிரீதியுடனேயே இருப்பாள். அவளையும் சொல்லி மற்றவர்களையும் சொல்லலாமா?

ருத்ரவீரன் :—நண்பரே! அப்படியே நம்பி மோசம் போன பாவி நான். ஸ்திரீகளின் வெளிவேஷத்தைக் கண்டு நம்பாதீர். ஐயோ! கொலைகள் சம்பவிப்பதும் அவர்களாலேயே. ஈசா! பெண்களை நடமாடும் பேய்களாக ஈசன் சிருஷ்டித்திருக்கின்றார்போலும். நல்லது நீர் எனக்கு ஓர் வாக்குத்தத்தம் செய்யவேண்டும்.

மனிதன் :—பெரியவரே! மறு பிறப்பு பிறந்து உம்மையே முதலில் கண்டேன் ஆகையால் நீர் சொல்லும் விதமே செய்கின்றேன் இதை நீர் நம்பலாம்.

ருத்ரவீரன் :—என்னால் செய்யமுடியாமல் போய்விட்டது. தப்பித்தனள் காதகி! இருக்கட்டும். நண்பா! நீ

"பால வித்ய

1930ஞு ஏப்பிரல்மீ பஞ்சாங்கம்.

தேதி	தமிழ்.	வார.	திதி, நக்ஷத்திரம், தியாஜ்ஜியம், யோகம் முதலியன.
1	சகூ	செவ்	துவி கச-உஎ, அசு ககூ-சO, தி கூ-ஙஉ, [தி சஙு-ஙஉ, ம,சி.
2	உO	புத	திரு கஉ-ஙங,பர ககூ-உக, தி சஅ-சக, ※ உப,சி,அ
3	உக	வியா	சது கூ-ஙஎ,கார் கஅ-க, [தி ருகூ ஙO, ம.
4	உஉ	வெ	பஞ் ரு-சக. ரோ கரு-சரு, [சே O-எ, தி உகூ-ங,ம,சி.
5	உங	சனி	ஷஷ் க-உ, ஸப் ரு-ஙஎ, மி கஉ சகூ, தி ஙஉ,ஙO,சி.
6	உச	ஞாயி	அஷ் சகூ-ருஎ, திரு கூ-கய, தி ஙஎ-கச, சி.
7	உரு	திங்	நவ சச-உ, புன ரு-கஅ,தி உங-ருஎ ஸ்ரீராமநவ,அ,சி.
8	உகூ	செவ்	தெ ஙஅ-உஉ,பூச க-கரு,ஆயி ருரு-ருஉ, தி ஙக-ங, சி.
9	உஎ	புத	ஏகா ஙஉ-கங,மக ருங-ச,தி உரு-கூ, ஸர்வ-ஏகா,சி,அ.
10	உஅ	வியா	துவா உகூ-சஅ,பூர சகூ-ருஎ,தி கஉ-உ,பிரதோ,சி,ம.
11	உகூ	வெ	திர உக-ருரு,உத் சஎ-கஉ,தி எ-எ, பங்-உத்,திதி-துவ
12	ஙO	சனி	சது கஎ-சரு, ○, ஹஸ் சரு கரு,தி எ-ஙச,ம.[சி,அ.
13	க	ஞாயி	பௌ கச-ஙச,சித் சச-கக,தி ச-ருகூ,தி ருஅ-உக, [மேஷரவி ககூ உஎ, சித்ராபர்வம், சூ-திதி,சி.
14	உ	திங்	சைத்ரகிரு-பிர கஉ உங, சுவா சச-உகூ, சே உ-எ, [தி ருஅ-சஅ, அ, ம. [ம,சி.
15	ங	செவ்	துவி கக-ககூ,விசா சரு ருக,சே உ ஙஅ,தி ருகூ-கஎ,
16	ச	புத	திரு கச-சக, அனு சஅ உகூ, சே O-கக, சி.
17	ரு	வியா	சது சங கச, கேட் ருஉ-ககூ, தி ங-உஉ, சி. [அ,சி.
18	சா	வெ	பஞ் கரு-ருகூ,மூல ருஎ கO,தி சங-ருச, தி ருஉ-ருO,
19	எ	சனி	ஷஷ் ககூ சஅ, பூரா கூO-O, தி உங-ஙO, அதிதி, சி.
20	அ	ஞாயி	ஸப் உச-உக,பூரா ங-O,தி உரு-ரு,ரிஷ ஙச-ருகூ, சி,அ
21	கூ	திங்	அஷ் உகூ-ககூ,உத்ரா கூ-ககூ,தி உO-உO,சிர உப,ம,அ.
22	கO	செவ்	நவ ஙச கஅ,திரு கரு-சங,தி உகூ-சரு,வராஹஜய,சி
23	கக	புத	தெ ஙஅ ருஎ, அவி உக-ருச, தி சக-ஙரு, ம, சி.
24	கஉ	வியா	ஏகா சஉ-ருரு,சத ௦எ-ஙக,தி சச-சகூ,ஸர்வ-ஏகா,ம,சி,
25	கங	வெ	துவா சரு உக, பூரட் ஙஉ-கங, தி ருஎ-சO, சி.
26	கச	சனி	திர சஎ-சச,உத்ட் ஙரு-ருக,சே க-ஙஅ,பிரதோ,சி,ம.
27	கரு	ஞாயி	சது சஅ-கஅ, ரேவ ஙஅ-கஅ, தி எ ச, அ, சி.
28	ககூ	திங்	● சஎ-ஙஉ, அசு ஙகூ-உஎ,தி உகூ-கரு,ஸர்வஅமா, சி.
29	கஎ	செவ்	வைசாகசுக்லபிர சரு-ஙச,பர ஙகூ உரு,தி ங உகூ, சி.
30	கஅ	புத	துவி சஉ-ஙO, ※ ங அ-கஎ,தி அ-ருக, ◡,கார்-உ,அ,சி

(பிரமோதூத சித்திரை)

புத	ராகு சுக்	குரு	
செ	2 மே-பு 4 மீ-செ 23 ரிஷ சு 26 ரிஷ-பு		
சனி		கே	

தயாராய்விட்டது! தயாராய்விட்டது!!

பிரமோத வருஷத்திய

"ஸ்ரீவித்யா"

ஆபீஸ் காலண்டர்.

சித்திரைமீ 1உயிலிருந்து பங்குனிமீ முடிய ஒவ்வொரு தேதிக்கும் கிழிக்கும் பக்கங்களாக அமைக்கப்பட்டுள்ளது. தமிழ் தேதியுடன் அதற்குச்சரியான இங்கிலீஷ் தேதிகளும் ஒவ்வொரு பக்கத்திலுமுள்ளது.

தென்னிந்தியாவில் தமிழ் உலகத்தோர் எல்லோருக்கும் தமிழ், இங்கிலீஷ் இரண்டு தேதிகளும் சேர்ந்து இருப்பதால் மிகவும் உபயோகமுள்ளது. மற்றபடி திதிவார நக்ஷத்திரங்களும் எல்லா விசேஷங்களும் அடங்கியுள்ளது.

எல்லாவிடங்களிலும் ஏஜண்டுகள் தேவை.
வியாபாரிகளுக்கு தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

விலை அணா 10

தேவைக்கு தாமதன்னியில் ஆர்டர் செய்யவும்.

பப்ளிஷர்ஸ் :—ஸ்ரீவித்யா பிரஸ்,
கும்பகோணம், (தென் இந்தியா)

Printed and Published by N. Venkataraman,
at the Sri Vidya Press, Kumbakonam.